# தமிழர் பொருண்மியம் வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 100/= இதழ் - 99 02.03.2025




## மலைப்பழங்களின் ராணி –மங்குஸ்தான் பழம்

2025 ஆம் ஆண்டிற்கான இலங்கை வரவு செலவுத் திட்டம்; 10

செத்தல் மிளகாயில் ஆபத்தா? 13

நெல் சாகுபடி தொடங்கப்பட்ட வரலாறு !!! 17

கைத்தொழில் புரட்சி 22

பொருளாதாரம் | சுற்றுலாத்துறை | வணிகம் | தொழில் முனைவு | விவசாயம்

# வாகன இறக்குமதியும், தீர்க்கப்பட வேண்டிய சிக்கல்களும்



வாகன இறக்குமதி தொடர்பில் பரவலாக பேசப்படும் நிலையில், பெப்ரவரி 1ஆம் திகதி முதல் தனிநபர் பாவனைக்கான வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுவது தொடர்பில் அரசாங்கத்திடமிருந்து இன்னமும் உத்தியோகபூர்வமான அறிவித்தல் வெளியாகவில்லை.

குறிப்பாக, கடந்தவாரம் வெளியாகியிருந்த சுங்க வரி தொடர்பான அறிவித்தலை தொடர்ந்து, இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் பற்றி சமூகவலைத்தளங்களில் அதிகளவு பேசப்படுவதை காண முடிகின்றது. வாகன இறக்குமதியாளர்களாக தம்மை அடையாளப்படுத்திக்கொள்ளும் சிலர் மற்றும் சில நிறுவனங்கள் வாகன மாதிரிகளின் பெயர்களுடன், அவற்றின் விலைகளையும் குறிப்பிட்டு சமூக வலைத்தளங்களில் விளம்பரம் செய்வதையும், சிலர் முற்பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அறிவித்தல்களை வழங்கிவருகின்றனர். கண்களுக்குபுலப்படாத சிறிய எழுத்துகளில், 'வரி மாற்றங்களுடன் விலைகளில் மாற்றம் ஏற்படலாம்' என்பது போன்ற நிபந்தனைகளையும் உள்ளடக்கியுள்ளனர்.

எவ்வாறாயினும், இறக்குமதி செய்யப்படும் வாகனத்தின் மீது நான்கு விதமான வரிகள் உள்ளடங்கியிருக்கும். அதில் இரு வரிகள் மாத்திரமே இதுவரையில் உறுதி செய்யப்பட்டுள்ளன. ஏனைய இரு வரிகளும் இதுவரையில் அரசாங்கத்தினால் அறிவிக்கப்படவில்லை. இந்நிலையில், அவற்றின் பெறுமதிகள் எவ்வாறானதாக அமைந்திருக்கும் என்பது தொடர்பில் பொறுத்திருந்து பார்க்க வேண்டியுள்ளது.

எனவே, உறுதியான தகவல்கள் வெளியாகும் வரை அவசரப்பட்டு எவருக்கும் பணத்தை செலுத்த வேண்டாம் என வாகன இறக்குமதியாளர் சங்கத்தின் அதிகாரிகள் கூட அறிவுரை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய சூழலில் தனிநபர் பாவனைகளுக்கான வாகன இறக்குமதிக்கு நாடு உண்மையில் தயாராக உள்ளதா என்ற கேள்விக்கு உண்மையான பதில் இல்லை என்பதாக இருந்தாலும், சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம், நாட்டில் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை இலங்கை அரசாங்கம் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. எனவே, இந்த நிபந்தனையை பேணும் வகையில், எதிர்வரும் மாதங்களில் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கினாலும், இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விலைகள் அதிகமாக அமைந்திருக்கும் என்பது போன்ற ஒரு கருத்தை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க அவர்கள் அண்மையில் பங்கேற்றிருந்த சகோதர மொழி ஊடக கலந்துரையாடல் ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

அவரின் கருத்துப்படி, தற்போதைய சூழலில் வாகனம் இறக்குமதி செய்யலாம். அவற்றின் விலை சற்று உயர்வாக அமைந்திருக்கும். அத்தியாவசியமாக வாகன தேவை கொண்டவர்களுக்கு அவற்றை வாங்க முடியும் என்பதாக அமைந்திருந்தது.

டிசம்பர் மாத இறுதி புள்ளி விவர தரவுகளின்படி, நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பு சுமார் 6 பில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்படும் நிலையில், அதில் சீனாவின் பங்களிப்பான 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நீங்கலாக, பயன்படுத்தக்கூடிய தொகை சுமார் 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாகவே காணப்படுகின்றது. இவற்றை தொடர்ந்து சீராக பேண வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திடம் உள்ளது. எனவே, இறக்குமதி செய்யப்படும் வாகனங்களை கட்டுப்படுத்தும் நோக்கில், இலங்கைக்கு வாகனம் கொண்டு வரப்பட்டதிலிருந்து 90 நாட்களுக்குள் அவை பதிவு செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையையும் அரசாங்கம் விதித்துள்ளது. உண்மையில் இது ஒரு வரவேற்கத்தக்க விடயமாகும். இதனால் அளவுக்கதிகமாக வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டு அவை விற்பனை பகுதிகளில் நீண்ட காலமாக காட்சிப்படுத்தி வைத்து, உயர்ந்த விலையில் விற்பனை செய்வதை தவிர்க்கவும், அளவுக்கதிகமாக அந்நியச் செலாவணி வெளியேற்றத்தை தவிர்க்கவும் உதவும். அத்துடன், அத்தியாவசியமாக வாகனம் கொள்வனவு செய்ய வேண்டிய தேவை உடையவர்கள் மாத்திரம் தமக்கு விரும்பிய வாகனத்தை இறக்குமதியாளர்களினூடாக இறக்குமதி செய்து பெற்றுக் கொள்ள முடியும். மற்றுமொரு சிறந்த விடயமாக குறிப்பிடக்கூடியது, தனிப்பட்ட பாவனைக்காக உற்பத்தி செய்யப்பட்டு மூன்று வருடங்களுக்கு உட்பட்ட வாகனங்களை மாத்திரமே இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சில தரப்பினர் பத்து வருடங்கள் வரையில் பழைமையான வாகனங்களை இறக்குமதி செய்யலாம் என கூறினாலும், அவை நிர்மாணத் தேவைகள் போன்ற வணிக நோக்கங்களுக்கான வாகனங்களாக அமைந்துள்ளன. தனிநபர் பாவனைக்குரிய வாகனங்களுக்கு பத்து வருட காலம் பொருந்தாது. கொவிட் தொற்றுப் பரவலுக்கு பின்னரான சூழலில் ஜப்பானில் வாகன உற்பத்திகள் குறைவடைந்துள்ளன. இதில் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் மீது வரி விதிப்பு உயர்வாக உள்ள நிலையில், அந்நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் வாகனங்களுக்கு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. அந்நாடுகளில் ஜப்பானிய வாகன உற்பத்தி நிறுவனங்கள் உற்பத்தி செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளமை தாக்கம் செலுத்தியுள்ளது. இலங்கைக்கு ஜப்பான் மற்றும் இந்தியா போன்ற நாடுகளிலிருந்து வாகனங்கள் பெருமளவில் இறக்குமதி செய்யப்படும் நிலையில், மூன்றாண்டுகளுக்கு உட்பட்ட வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட வேண்டும் என்ற அரசின் தீர்மானம், இறக்குமதி செய்யப்படும் வாகனங்களை கட்டுப்படுத்தும் மற்றுமொரு வியூகமாக அமைந்திருக்கும்.

இறுதியாக வாகன இறக்குமதி 2020 மார்ச் மாதம் வரையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பின்னரும் இலத்திரனியல் வாகனங்கள், பொதுப் போக்குவரத்து,

பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் போன்ற அத்தியாவசிய தேவைகளுக்கான வாகனங்கள் அவ்வப்போது இறக்குமதி செய்யப்பட்டாலும், திறந்த முறையில் பொது மக்கள் பாவனைக்கான வாகன இறக்குமதி பொருளாதார நெருக்கடியையும், அந்நியச் செலாவணி இருப்பு இன்மையையும் காரணம் காண்பித்து இடைநிறுத்தப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில் அமெரிக்க டொலரின் பெறுமதி சுமார் 180 – 190 ரூபாய்களுக்கு இடைப்பட்டதாக காணப்பட்டது. தற்போது இந்தப் பெறுமதி ரூ. 290 – 295 ஆக காணப்படுகின்றது. இதில் சுமார் 100 ரூபாய் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இறக்குமதி செய்யப்படும் வாகனத்தின் பெறுமதி 2020 ஆம் ஆண்டில் காணப்பட்டதை விட உயர்வானதாகவே அமைந்திருக்கும். வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டால், சந்தையில் அமெரிக்க டொலர்களுக்கான கேள்வியும் அதிகரிக்கும், இதனால் தற்போது 290–295 ரூபாயாக காணப்படும் அமெரிக்க டொலரின் பெறுமதி 310 – 320 ரூபாய் வரையில் அதிகரிக்கலாம்.

இவ்வாறிருக்க இந்த வாகன இறக்குமதி தொடர்பில் உள்நாட்டில் ஏற்கனவே வாகனங்களின் உரிமையாளர்களாக காணப்படுவோர் மத்தியிலும், வாகன மொன்றை வாங்கும் கனவுடன் திகழ்வோரிடமும் பிரதேச ரீதியில் மாறுபட்ட நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. வட பிராந்தியத்தை எடுத்துக் கொண்டால், அங்கு வாகனமொன்றை வாங்கி விற்பதில் ஆர்வம் காண்பிப்பது மிகவும் குறைவு. வாகனமொன்றை வாங்கினால் அதனை நீண்ட காலம் பேணி பயன்படுத்தும் ஒரு மனநிலை கொண்டவர்களாக அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் உள்ளனர்.

கிழக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால் நிலைமை சற்றுவேறு, பத்து வருடத்தினுள் நாட்டின் அனைவருக்கும் வாகனமொன்றை வாங்கக் கூடிய சூழல் உருவாக்கப்படும் என அரசாங்கத்தின் அங்கத்தவரான பாராளுமன்ற உறுப்பினர் நளின் ஹேவகே அண்மையில் குறிப்பிட்டிருந்தார். அதன் பிரகாரம் அப்பகுதி மக்கள் வாகன இறக்குமதி தொடர்பிலும், 40 – 50 இலட்சம் ரூபாய்க்கு வாகனமொன்றை கொள்வனவு செய்யலாம் என்ற பலத்த எதிர்பார்ப்பை கொண்டிருந்த போதிலும், அண்மைய வரி விதிப்பினூடாக அது சாத்தியமற்றது என்பது புலனாகியுள்ள நிலையில், பாவித்த வாகனங்களின் விலைகளில் எவ்வாறான நிலை ஏற்படும் என்பதில் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளனர்.

மத்திய மாகாணத்தை பொறுத்தமட்டில், வாகன இறக்குமதியில் அவர்களுக்கு முற்றிலும் நாட்டம் இல்லாத ஒரு நிலையே உள்ளது எனக் குறிப்பிடலாம். வாகனம் வைத்திருப்பவர்களும் வாகன இறக்குமதியுடன் தமது வாகனங்களின் விலைகள் வீழ்ச்சியடைந்துவிடுமோ என்ற ஒரு பதட்டத்துடனும், அதனால் அவற்றை விற்பனை செய்வது தொடர்பில் கவனம் செலுத்திவருவதை அவதானிக்கமுடிகின்றது.

வாகன இறக்குமதி என்பது வெறும் வாகனங்கள் மாத்திரம் இறக்குமதி செய்யப்படுவதல்ல. அவற்றுக்கு தேவையான உதிரிப்பாகங்கள், அவற்றை செலுத்துவதற்கு அவசியமான எண்ணெய் வகைகள் மற்றும் எரிபொருட்களும் இறக்குமதி செய்யப்பட வேண்டும். இவற்றுக்காகவும் அந்நியச் செலாவணி செலவிடப்பட வேண்டியிருக்கும்.

எனவே வாகன இறக்குமதி என்பது வாகனங்கள் இலங்கைக்கு கொண்டு வரப்படுவது என்பதுடன் மாத்திரம் நின்றுவிடாது.

உள்நாட்டில் காணப்படும் பாவித்த வாகனங்களின் விலைகளை நியமப்படுத்துவதற்கு பொறிமுறை இருப்பது அவசியமாகின்றது. குறிப்பாக வாகனங்கள் இறக்குமதியுடன், இந்த நியமப்படுத்தலை மேற்கொள்வது சிறந்ததாக அமைந்திருக்கும். வாகனங்கள் என்பது பெரும்பாலும் இரும்பினால் ஆனவை. தங்கத்தால் செய்யப்பட்டவை அல்ல. எனவே, காலப்போக்குடன் அவற்றின் பெறுமதி இலட்சக் கணக்கில் அதிகரிப்பது என்பது நடைமுறைக்கு புறம்பானதாகும். ஆனாலும், இலங்கையில் வாகன இறக்குமதி கட்டுப்பாட்டை காரணம் காண்பித்து பயன்படுத்திய வாகனங்களின் விலைகள் சுமார் இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டு விற்கப்படுகின்றன. குறிப்பாக 2023 ஆண்டின் பிற்பகுதியில் 6.2 மில்லியனுக்கு விற்பனையாகிய கார், ஒரு வருடம் கழிந்த பின்னர் 7.8 மில்லியன் ரூபாய்க்கு விற்பனைக்காக விளம்பரம் செய்யப்பட்டுள்ளதை காண முடிகின்றது. இது போன்ற விடயங்களில் அரசாங்கத்தின் தலையீடு அவசியமாகின்றது.

இந்த அசாதாரண விலை உயர்வுகளை கட்டுப்படுத்தவும், வாகன மாபியாக்களை அடக்கவும், அரசாங்கம் விலை மதிப்பீட்டு பொறிமுறை ஒன்றை பாவனையாளர்களுக்காக அறிமுகம் செய்யலாம். இதற்காக வாகன பதிவு திணைக்களத்தில் விலை மதிப்பீட்டுக்காக கருமபீடமொன்றை ஏற்படுத்தி, ஒரு சிறுதொகை கட்டணத்தை கொள்வனவாளரிடமிருந்து பெற்று, தாம் கொள்வனவு செய்ய எதிர்பார்க்கும் வாகனத்தின் பதிவுப் புத்தகம் மற்றும் வாகனத்தின் பௌதிக நிலை அறிக்கை போன்றவற்றை கொண்டு அதன் சந்தை விலை ஒரு குறித்த மட்டத்தில் காணப்படும் என்பதை சான்றாக வழங்கலாம். இதனூடாக, அசாதாரணமாக அதிகரித்துச் செல்லும் பயன்படுத்திய வாகனங்களின் விலைகளை கட்டுப்படுத்தி சாதாரண நிலையை பேண முடியும். இது காப்புறுதி மற்றும் லீசிங் போன்ற வசதிகளுக்கும் உதவியாக அமைந்திருக்கும்

வாகன விலை மதிப்பீடு தற்போது தனியார் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றை கண்காணிப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கு எவ்விதமான முறைகளும் இல்லை. இவ்வாறான சூழலில் வாகனங்களின் விலைகளை சீரான நிலையில் பேணுவதற்கும், அளவுக்கதிகமான தொகையை செலுத்தி வாங்குவதை தவிர்க்கும் வகையிலும் அரசாங்கத்தின் தலையீடு முக்கியமானதாக அமைந்திருக்கும்.

இலங்கையில் ஏற்கனவே பயன்படுத்திய வாகனங்களின் விலைகளுக்கு நிகரானதாக அல்லது அவற்றை விட சற்றே அதிகரித்ததாக இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விலை இருக்குமாயின், பயன்படுத்திய வாகனங்களின் விலைகள் வீழ்ச்சியடைவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளன. ஏனெனில் புதிய வாகனமொன்றை வாங்குவதில் நாட்டம் காண்பிப்போரின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

அவ்வாறான சூழலில், அவற்றின் லீசிங் பெறுமதி மற்றும் காப்புறுதி பெறுமதி போன்றனவும் மாற்றமடைய வேண்டும். ஆனாலும், அவற்றின் உடன்படிக்கைகளின் பிரகாரம் மாற்றம் ஏற்படாது. உதாரணமாக 2019 ஆம் ஆண்டில் 7 மில்லியன் ரூபாயாக காணப்பட்ட வாகனமொன்றின் விலை தற்போது 17 மில்லியனாக உயர்ந்துள்ளது. புதிதாக இறக்குமதி செய்யப்படும் வாகனமொன்றின் விலை 14 மில்லியனாக இருந்தால், ஏற்கனவே அந்த 2019 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வாகனத்தை வைத்திருப்போருக்கு ஏற்படும் நட்டம் அதிகமானதாக இருக்கும். ஏனெனில் அவர் 17 மில்லியன் பெறுமதிக்கே லீசிங் செய்திருப்பார், காப்புறுதி செய்திருப்பார். இவ்வாறான பாதிப்பிலிருந்து வாகன உரிமையாளர்களை பாதுகாப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பது தொடர்பிலும் கேள்விகள் நிலவுகின்றன. இவ்வாறான பிரச்சனைகளிலும் கவனம் செலுத்தி, பாதிப்பு ஏற்படுவதை குறைத்து இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்படும் என்பது போன்ற கருத்தை மத்திய வங்கியின் ஆளுநர் தமது உரையாடலின் போது குறிப்பிட்டிருந்தார்.

இந்த அரசாங்கத்தினால் வாகன விலை மதிப்பீடு என்பது பயன்படுத்திய வாகனங்களுக்கு மாத்திரமன்றி, இறக்குமதி செய்யப்படும் புதிய வாகனங்களுக்கும் பொருந்தும். ஏனெனில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கு

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி :+94(77)2034807 +94 (77) 776 9751

## இலங்கைக்கு அவசியமாகும் தன்னிறைவு பொருளாதாரம்

நமது நாடு சகல இயற்கை வளங்களும் நிறைந்த நாடாகும். இன்றைய சூழ்நிலையில் இவ்வளங்களை உரிய முறையில் பயன்படுத்தி கொள்வது மிகவும் அவசியமாகும்.

பிரபஞ்சம் படைக்கப்பட்டு மனித வர்க்கம் தோற்றம் பெற்றது முதல் இன்று வரை மனித சமூகம் அரசியல் தலையிட்டினுடு செயற்படும் மிக பிரதான அம்சம் பொருளாதாரம் ஆகும்.

அந்த வகையில் நமது நாட்டின் பொருளாதாரத்தை வளப்படுத்த வேண்டியது அவசியமாகும். விவசாயம், உள்ளூர் உற்பத்தி முதலான துறைகளை விருத்தி செய்வதன் மூலம் பொருளாதாரத்தில் தன்னிறைவை பெற முடியும்.

ஒவ்வொரு நாட்டினது ஒவ்வொரு மனிதனினதும் நிலைத்திருப்பிற்கு பொருளாதாரம் தேவை. குறித்த பிரதேசத்தில் அல்லது நாடுகளுக்கிடையில் கொடுக்கல், வாங்கல்கள், உற்பத்தி, நுகர்வு போன்ற நடவடிக்கைகளையும் கொண்டு செயற்படும் முறையை பொருளாதாரம் எனலாம்.

அன்றாட வாழ்வில் நேரடியாகவோ மறைமுகமாகமோ தொடர்புபடுகிறது ஆரம்ப காலத்தில் இருந்தோ பொருளாதாரம் விவசாயம், கைத் தொழில், சேவை ஆகிய அடிப்படையில் மேற்கொள்ள படுகிறது ஆடம்பர மற்றும் தன்னிறைவு பொருளாதாரத்தில் தன்னிறைவு பொருளாதாரமே சிறந்ததாகும். இனிவரும் காலங்களில் தன்னுரைவு பொருளாதாரத்தை கருத்தில் கொண்டு நமது வாழ்வாதாரங்களை வளப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே நமது அவா. தன்னிறைவு பொருளாதரத்தில் பலம் மிக்க ஒரு மக்கள் கூட்டத்தை உருவாக்குவோமாக இருந்தால் நமது நாடு எப்போதும் பொருளாதார ரீதியில் வலுக்குன்றி போகாது என்பது திண்ணம்.

# மட்பாண்டங்கள்

ஒரு Teflon பூசப்பட்ட பாத்திரத்தில் ஒரு சிறிய கீறல் (scratch) ஏற்பட்டால், 9,000 வரை நச்சான மைக்ரோபிளாஸ்டிக் (microplastic) துகள்கள் வெளியாவதற்கான வாய்ப்பு உள்ளது.

அதிக சேதம் அடைந்து பூச்சு முற்றிலும் உடைந்துவிட்டால், 2 மில்லியனுக்கு (20 லட்சம்) மேற்பட்ட மைக்ரோபிளாஸ்டிக்துகள்கள்வெளிவந்து உணவில் கலந்து விடலாம்.

இந்தமைக்ரோபிளாஸ்டிக்துகள்கள் நம்முடைய உடலில் சேர்ந்து சுகாதார பிரச்சினைகளை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது. அதனால், தெஃப்ளான் பாத்திரங்களை ஒழுங்காக பராமரிக்க வேண்டும்மற்றும் அதிக சேதமடைந்தால் பயன்படுத்தாமல் மாற்றுவது நல்லது!

வீளக்ஷீயிலிஜ பாத்திரங்களில் இருந்துவெளியேறும்மைக்ரோபிளாஸ்டிக் துகள்கள் உடலில் சேர்ந்தால் பல பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும்:

1. குடல் மற்றும் செரிமான கோளாறு

இந்த துகள்கள் சிறியதாக இருப்பதால் அவை குடலில் தேங்கிக் கொண்டு செரிமான பிரச்சினைகளை ஏற்படுத்தலாம்.

குடல் கிருமிகள் (gut microbiome) பாதிக்கப்படுவதால் உணவு ஜீரணமும், நோய் எதிர்ப்பு சக்தியும் குறையலாம்.

2. ஹார்மோன் மாற்றங்கள் (Hormonal Imbalance)

மைக்ரோபிளாஸ்டிக் சில கெட்ட ரசாயனங்களை கொண்டிருப்பதால், சுரப்பிகள் (Endocrine System) பாதிக்கப்படலாம்.

இது முதிர்வயது பிரச்சினைகள், மாதவிடாய் கோளாறு, மற்றும் மொத்த உடலின் சமநிலை மாற்றங்கள் ஏற்பட காரணமாகும்.

3. நச்சு சேர்ப்பு (Toxic Accumulation) & புற்றுநோய் அபாயம்

இந்த துகள்கள் உடலில் கலந்து கொண்டே இருக்கலாம், நீண்ட காலம் சென்றால் கல்லீரல், சிறுநீரகம் போன்ற முக்கிய உறுப்புகள் பாதிக்கலாம்.

சில கேமிக்கல்கள் புற்றுநோய் (Cancer) ஏற்படுத்தும் தன்மை கொண்டிருக்கும்.

4. இரத்த ஓட்ட பாதிப்பு & இதய நோய்

மைக்ரோபிளாஸ்டிக் இரத்த ஓட்டத்தில் சென்றால் இதய நோய்கள், இரத்த அழுத்தம் & அடைப்பு (Blockage) அபாயம் அதிகரிக்கலாம்.

5. மகப்பேறுக் கோளாறு & குழந்தை வளர்ச்சி பாதிப்பு

கர்ப்பிணி பெண்களுக்கு, இது கருப்பை வளர்ச்சியை (Fetal Development) பாதிக்கலாம்.

குழந்தைகளுக்கு பிறகு மூளை வளர்ச்சி & நோய் எதிர்ப்பு சக்தி குறைவு ஏற்படலாம்.

**மாற்றீடுகள்**

Teflon பாத்திரங்களுக்கு மாற்றாக நீங்கள் அதிக சுகாதாரமான மற்றும் பாதுகாப்பான பாத்திரங்களை பயன்படுத்தலாம்:

1. உலோக பாத்திரங்கள் (Stainless Steel)

☛ (Stainless Steel) பாத்திரங்கள் நீண்ட ஆயுளும், பாதுகாப்பானதாகவும் இருக்கும்.

☛ உணவில் ரசாயன கலப்பு ஏற்படாது மற்றும் அதிக வெப்பத்தையும் தாங்கும்.

2. இரும்பு பாத்திரங்கள் (Cast Iron)

☛ கன்சயம் (Cast Iron) பானைகள் இயற்கையாகவே Non-Stick தன்மை கொண்டது.

☛ உளுத்தம் பருப்பு அல்லது எண்ணெய் தடவி சீசனிங் (Seasoning) செய்யலாம்.

☛ உணவில் சிறிது இரும்புச் சத்து (Iron) கலந்து உடல் நலனை மேம்படுத்தும்.

3. களிமண் பானைகள் (Clay Pots)

☛ மண் பானைகள் (Earthenware / Clay Pots) உணவை சுவையாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவும்.

☛ நச்சுச்சத்துகள் கலக்காது, உணவில் இயற்கையான சத்துக்கள் பேணப்படும்.

4. செம்பு & வெள்ளி பாத்திரங்கள் (Copper & Silver Cookware)

☛ செம்பு பாத்திரங்கள் சிறந்த ஆன்டி-மைக்ரோபியல் (Anti-Microbial) தன்மை கொண்டவை.

☛ வெள்ளி பாத்திரங்கள் உணவை பிரிக்காமல் இயற்கையாக பாதுகாக்கும்.

☛ Teflon பாத்திரங்களை குறைத்து, இயற்கை வழியில் சமைக்கும் பழக்கத்துக்கு மாறுவது நல்லது.




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 225,100.00 ரூபா.**

**24 கரட் தங்கம் 245,750.00 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி -** எவ்வளவு உழைத்தாலும் செலவுகள் அதிகமாக வருகின்றதே? இந்த நிலையில் வரவுக்குள் எவ்வாறு செலவு-களை வைத்துக்கொள்வது?

**கயல்வழி கண்ணன்**
**வவுனியா**

**பதில் -** அதிகரிக்கும் வருமானத்துக்கு ஏற்ப, ஒருவரது செலவுகளும் தொடர்ந்து அதிகரிக்கும் என்கிறார், பொருளாதார நிபுணரான பார்கின்சன். இன்னும் சொல்லப்போனால், “ஒருவர் எவ்வளவு பணம் சம்பாதிக் கிறாரோ அதைவிட சற்று ‘திகமாகவே அவர் செலவழிப்பார்” என்கிறார் அவர்.

உளவியல் ரீதியாக பார்க்கையில், இது சராசரி மனிதர்களின் மனோபாவம். இதைக் கடப்பவர்களே பணக்காரர்கள் ஆகிறார்கள்.

இதற்கான சில உத்திகளையும் பொருளாதார நிபுணர்கள் முன்வைத்துள்ளார்கள்.

வருமானம் அதிகரிக்கும்போது வருமானத்தில், 50ூ மட்டுமே தன்னுடைய பணம் என எண்ணி பணக்காரர்கள் செலவழிக்கிறார்கள். மீதமுள்ள 50ூ பணத்தை, அது தன்னுடைய பணம் அல்ல என்ற சிந்தனையோடு அதை எதிர்காலத்துக்காக சேமிக்கிறார்கள் என்கிறார், பிரையன் ட்ரேசி என்கிற தன்முனைப்பு எழுத்தாளர். பணக்காரர்கள் வங்கிகளுக்கு சேமிப்புக்கும், ஸ்டாண்டிங் இன்ஸ்டிரக்ஷன் (ளுவயனெைபெ ஐளெவசரஉவழைெ) கொடுத்து விடுகிறார்கள். தானாகவே சேமிப்புக்கு சென்றுவிடும். இதனால் ஒவ்வொரு மாதமும், சேமிக்கலாமா, வேண்டாமா என்று சிந்திக்க வேண்டிய அவசியம் கிடையாது.

பணக்காரர்கள் எந்தப் பொருளை வாங்கும் போதும் பேரம் பேசத் தவறுவதில்லை. பேரம் பேசுவதால் தங்கள் மதிப்பு குறைந்துவிடும் என்று எண்ணுவதும் இல்லை. மேலும் அதிக விலை உள்ள பொருள் வாங்குவதையும் அவர்கள் தவிர்க்கவே விரும்புகிறார்கள். துணிகள் முதல் வாகனங்கள் வரை எல்லாப் பொருள்களிலும் மிகக் குறைந்த விலை, நடுத்தர விலை, சற்று உயர்வான விலை, மிக அதிக விலை என்ற நான்கு வகையான விலைகள் உள்ளன. பணக்காரர்கள் இரண்டாவது அல்லது மூன்றாவது விலையில் உள்ள பொருள்களை மட்டுமே வாங்குகிறார்கள். மேலும் தேவையற்ற பொருட்களை அவர்கள் வாங்குவதில்லை.

தவணை முறை என்கிற சித்தாந்தம் வந்தாலும் வந்தது. செல்போன், வாகனம், வீடு என அனைத்தையும் தவணை முறையில் வாங்கும் பழக்கம் நம்மிடம் வந்துவிட்டது. வருமானம் தரக்கூடிய அல்லது செலவைக் குறைக்கக்கூடிய எந்தப் பொருளையும் தவணை முறையில் வாங்குவதில் தவறில்லை. ஏனென்றால் அவற்றின் மூலம் கிடைக்கிற கூடுதல் தொகையை வைத்து நாம் வட்டியைக் கட்டி, கடனை அடைத்து விடலாம். ஆனால் வருமானம் தராத எந்த பொருளையும் நாம் கடனில் வாங்குவது என்பது நமக்கான கூடுதல் செலவையே ஏற்படுத்தும்.

**உங்கள் கேள்விகளை**

**தமிழர் பொருண்மியம், கிறீன் மீடியா ஹவுஸ், 68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். வாட்ஸ் அப் முகவரி +94(77)2034807 +94 (77) 776 9751**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 550/= |
| உருளைக்கிழங்கு | 80/= |
| பச்சை மிளகாய் | 1350/= |
| தக்காளி | 200/= |
| மரவள்ளிக்கிழங்கு | 250/= |
| கோவா | 350/= |
| கரட் | 700/= |
| வாழைக்காய் | 200/= |
| சின்ன வெங்காயம் | 320/= |
| பாகற்காய் | 485/= |
| வெண்டிக்காய் | 230/= |
| பயற்றங்காய் | 240/= |
| பீற்றூட் | 580/= |
| முருங்கைக்காய் | 900/= |
| தேங்காய் | 155/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 182/= |
| கனடா டொலர் - | 204/= |
| சீன யுவான் - | 37/= |
| யுரோ - | 303/= |
| ஜப்பான் யென் - | 1.8/= |
| சிங்கப்பூர்டொலர் - | 215/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 347/= |
| சுவிஸ் பிராங் - | 319/= |
| அமெரிக்க டொலர் - | 291/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 192/= |
| கனடா டொலர் - | 212/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 315/= |
| ஜப்பான் யென் - | 1.9/= |
| சிங்கப்பூர் டொலர் | 225/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 368= |
| சுவிஸ் பிராங் - | 334/= |
| அமெரிக்க டொலர் - | 300/= |

# தக்காளி

அமுதன்



தக்காளி சோலனேசியே குடும்பத்தை சேர்ந்தது. உலகம் முழுவதும் பயிரிடப்படும் காய்கறிகளுள் தக்காளியும் ஒன்று. தக்காளியில் அத்தியாவசிய அமினோ அமிலங்கள், வைட்டமின்கள், சிட்ரிக், ஃபார்மிக் மற்றும் அசிட்டிக் அமிலங்கள் போன்ற ஆரோக்கியமான கரிம அமிலங்கள் ஏராளமாக இருப்பதால் தக்காளி பாதுகாப்பு உணவுகளின் பட்டியலில் முக்கிய இடத்தை வகிக்கிறது. பழத்தின் கண்ணைக் கவரும் சிவப்பு நிறம் லைகோபீனிலிருந்து வருகிறது. குறைந்த காலத்தில் அதிக மகசூல் தரக்கூடிய தக்காளி சாகுபடியை பற்றி பார்க்கலாம்.

### பயிர் வகை

தோட்டக்கலை பயிர்

### ரகங்கள்

பூசா இயர்லி ட்வார்ப், சியோக்ஸ், பூசா உபார், பூசா ரூபி, பூசா சதாபஹர், பந்த் பஹார், அர்கா சாம்ராட்.

### பருவம்

தக்காளி ஆண்டு முழுவதும் பயிரிட படும் ஒரு முக்கியமான பயிராகும். இது சம்பா, குருவை என்ற இரண்டு பருவத்திலும் வளரும்.

### ஏற்ற மண் வகை

மணற்பாங்கான மண் முதல் கனமான மண் வரை, தக்காளி செடிகளை பல்வேறு மண் வகைகளில் பயிரிடலாம். நல்ல வடிகால்வசதிஉள்ளவண்டல்மண்தக்காளி சாகுபடிக்கு உகந்தது. தக்காளிக்கான மண்ணின் ஹீக்ஷி அளவு 6.0–7.0 வரை இருக்கவேண்டும். 5.0 அல்லது அதற்கும் குறைவான கார அமிலத்தன்மை இருக்கும் நிலையில் லைமிங் பரிந்துரைக்கப்படுகிறது.

### தட்பவெப்பநிலை

தக்காளிக்கான வெப்பநிலை 21 முதல் 24°C வரை இருத்தல் வேண்டும். வெப்பநிலைமற்றும்ஒளிதீவிரத்தால்பழத்தின் எண்ணிக்கை, நிறம் மற்றும் ஊட்டச்சத்து உள்ளடக்கம் பாதிக்கப்படுகின்றன. விதை முளைப்பதற்கு 20 முதல் 25°C வரையிலான வெப்பநிலை ஏற்றது. குறைந்த ஈரப்பதம், வறண்ட காற்று மற்றும் அதிக வெப்பநிலை (38°C) அனைத்தும் பழம் உருவாக்குவதில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

### தக்காளிக்கான விதைப்பு மற்றும் நில தயாரிப்பு முறைகள்

### நாற்றங்கால் பராமரிப்பு

தக்காளி நடவுப் பயிராக இருப்பதால், ஒரு ஹெக்டேர் பரப்புக்குத் தேவையான நாற்றுகளை வளர்க்க 225 சதுர மீட்டர் பரப்பளவுகொண்ட உயரமானநாற்றுப்படுக்கை போதுமானது. உயர்ந்த விதைப் படுக்கை ஒரு சதுர மீட்டருக்கு 3 கிலோ நன்கு மக்கிய தொழு உரம் மற்றும் 0.5 கிலோ தழைச்சத்து, மணிச்சத்து மற்றும் சாம்பல்சத்து கூடுதலாக இடுவது நாற்றுக்களின் சிறந்த வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.



### விதை அளவு மற்றும் இடைவெளி

ஒரு ஹெக்டருக்கு 400 முதல் 500 கிராம் தக்காளி விதைகள் போதுமானது. 60 முதல் 120 செ.மீ வரை வரிசை இடைவெளியும், 45 முதல் 75 செ.மீ வரை செடிக்கு செடி இடைவெளியும்பொதுவாககடைபிடிக்கப்படும் இடைவெளி ஆகும்.

### நடவு வயல் தயாரித்தல்

தக்காளி சாகுபடிக்கு பயன்படுத்தப்படும் நிலத்தை ஒன்று அல்லது இரண்டு ஆழமான உழவுகள் மூலம் நன்குது ர்வார வேண்டும். மேலும், விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப வயலில் முகடுகள் மற்றும் பள்ளங்கள் உருவாக்கி நிலத்தை தயார்செய்யலாம்.

### நடவு செய்தல்

பொதுவாக, விதைத்து 20 முதல் 30 நாட்களில் நாற்றுகளை நடவு வயலுக்கு மாற்றலாம்.

### நீர் நிர்வாகம்

நாற்று நட்ட மூன்றாவது நாள் உயிர்த் தண்ணீர்பாய்ச்சவேண்டும்.பிறகு,மண்ணின் ஈரத்தன்மைக்கு ஏற்ப நீர் பாய்ச்சலாம்.



கோடைக்காலத்தில் விளையும் பயிருக்கு 3 முதல் 4 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சுவது அவசியம். நீண்ட வறட்சி நிலவும் போது பழங்கள் உடைந்து போகும், இதை தவிர்க்க அவ்வப்போது தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

**உரமேலாண்மை**

தக்காளிக்கான பரிந்துரைக்கப்பட்ட உரத்தின் அளவு மண்ணின் வகை பொறுத்து, மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடும். தக்காளி சாகுபடியில் ஒரு எக்டருக்கு 15–20 டன் தொழு உரம், 100–125 கிலோ தழைச்சத்து, 50–60 கிலோ மணிச்சத்து மற்றும் 50–60 கிலோ சாம்பல் சத்து பரிந்துரைக்கப்படுகிறது. இறுதி உழவு முடிந்ததும், தொழு உரத்தை மண்ணில் இட வேண்டும். பின்னர் நாற்றுகளை நடவு வயலுக்கு மாற்றுவதற்கு முன்போ அல்லது நடவு வயலுக்கு மாற்றி ஐந்து நாள் கழித்தோ அடியுரமாக 1/3 தழைச்சத்தையம், முழு மணி மற்றும் சாம்பல் சத்தையும் கொடுக்க வேண்டும். மீதமுள்ள 2/3 தழைச்சத்தை சம அளவு பிரித்து 20 மற்றும் 45–ஆம் நாள் கொடுக்க வேண்டும்.

**இடை உழவு முறை**

**களையெடுப்பு**

தக்காளி வயலில் களையில்லாமல் பாதுக்காக்க களையெடுத்துல் மற்றும் மண் கட்டுதல் போன்றவற்றை தவறாமல் செய்ய வேண்டும். களை முளைப்பதற்கு முந்தி களைக்கொல்லிகளான பெண்டிமெத்தாலின், ஆக்ஸிஃப்ளோர்ஃபென் பயன்படுத்துவது சிறந்த தீர்வை தரும். பிளாஸ்டிக் அல்லது வைக்கோல் கொண்டு நிலப்போர்வை செய்தும் களைகளைக் கட்டுப்படுத்தலாம்.

**பயிர் பாதுகாப்பு**

**தக்காளி பயிரைத் தாக்கும் பூச்சிகள்**

**காய்ப்புழு: ஹெலிகோவெர்பா ஆர்மிஜீரா**

**அறிகுறிகள்**

பொதுவாக தக்காளி பழங்கள் முதிர்ச்சியடையும் போது இந்த காய்ப்புழு அவற்றை சேதப்படுத்துகின்றன. இளந்துளிர்களை இளம்புழுக்கள் உண்ணும். முதிர்ச்சி அடைந்த புழுக்கள் தக்காளியில் வட்ட வடிவ துளையிடும். புழுக்கள் காயினைத் துளைத்து தலைப்பகுதியை மட்டும் உட்செலுத்தி உடலின் பாதி பகுதியை வெளியே வைத்தக்கொண்டு சாப்பிடும்.

**கட்டுப்படுத்தும் முறை**

தக்காளிக்கான நிலத்தை உழும் போது கடைசியாக ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம் புண்ணாக்கை போட வேண்டும்.

வேப்ப எண்ணெயை (1500–3000 பிபிஎம்) 5 மில்லி/லிட்டர் தண்ணீரில் கலந்து, முட்டைகளைக் கொல்ல பூச்சிகளின் ஆரம்ப கட்டங்களில் தெளிக்க வேண்டும்.

தீவிர தாக்குதலின் போது 0.3 மில்லி / லிட்டர் நீரில் ஃப்ளுபென்டியாமைடு அல்லது 0.3 மில்லி / லிட்டர் நீரில் குளோரன்ட்ரானிலிப்ரோல்பயன்படுத்த வேண்டும்.

**இலை துளைப்பான்: லிரியோமைசா ட்ரைஃபோலியை**

**அறிகுறிகள்**

இலைகளில் வெண்ணிற கோடுகள் காணப்படும். நாளடைவில் இலைகள் வாடிக் காய்ந்து போய் உதிரி விடும்.

**கட்டுப்படுத்தும் முறை**

ஆரம்ப கட்டங்களில் வெண்ணிற கோடுகள் காணப்படும். தாக்கப்பட்ட இலைகளை சேகரித்து அழிக்க வேண்டும். தீவிரத்தன்மை அதிகரிக்கும் போது, 5% வேப்பங்கொட்டை சாற்றை தெளிக்கவும். தீவிர சூழ்நிலைகளில் சயண்ட்ரானிலிப்ரோல் 10.26 ஓ.டி – ஐ 1.8 மில்லி/தண்ணீரில் கலந்து பயன்படுத்தவும்.

**ஊசித்துளைப்பான்:ட்யுடாஅப்சல்யூட்டா**

**அறிகுறிகள்**

ஊசித்துளைப்பான் மொட்டுகள், இலைகள் மற்றும் பழங்களை பாதிக்கும். இலைகளின் மேற்பரப்பு திசுக்களை சுரண்டும். பழங்களில் ஊசி துவார அறிகுறிகளை ஏற்படுத்தும்.

**கட்டுப்படுத்தும் முறை**

இவற்றை அகற்ற, ஆழமான உழவு செய்ய அறிவுறுத்தப்படுகிறது. தாக்குதலின் அளவை அளவிட, ஏக்கருக்கு 10 முதல் 15 மஞ்சள் ஒட்டும் பொறிகளை அமைப்பது முக்கியம். தீவிர தாக்குதலின் போது ஏக்கருக்கு 60 மி.லி என்ற அளவில்

# வாழ்வும் வளமும்

**நாம் உழைக்கவும் உழைத்த பணத்தை சிக்கனமாக செலவழிக்கவும், கணிசமான தொகையை சேமிக்கவும் பழக வேண்டும். சேமிப்பு என்ற சொல்லை நான் இப்போதெல்லாம் வங்கியின் சேமிப்பு புத்தகத்தில் மட்டும்தான் பார்க்கிறேன். எங்கு பார்த்தாலும் கடன் கடன் கடன் என்ற பதாகைகள்தான்.**

ல்ல்ல்ல்ல்ல்ல்ல்ல்ல்ல்ல்ல்ல்



எழுத்தாளர் –தமிழ்க்கவி

'கெட்டாருக்குற்றார் கிளையிலுமில்லை வாழ்ந்தாருக்குற்றார் வழியிலுமுண்டு' மனிதர்களுடைய மனநிலையை சரியாக பகுத்துணரவைக்கும் பழமொழி அது.

வாழ்க்கையில் நாம் வாழ ஆரம்பிக்கும்போதே எமக்கு தரப்படும் முக்கிய அறிவுரை, உனக்கு தின்னக்குடிக்க இருக்கோ இல்லையோ பாக்கிற சனம் மதிக்கிறமாதிரி நடக்க வேணும். நீ வீட்டில திண்டதக்கண்டதார், பட்டினி கிடந்ததை கண்டதார்.

நீ என்ன மாதிரி சமுதாயத்தில நடக்கிறியோ அதைத்தான் உலகம் பாக்கும். நாலுபேர் மதிக்க நடக்கிறதெண்டது மிக முக்கியம். இந்த நாலு பேர் ஆர்? தாய் தகப்பன் குரு எண்டால் அது மூன்றுபேர். நண்பர்கள் என்றால் அவர்களும் நாலு பேருக்கும் அதிகமாவார்கள். மாமன் மாமி சித்தப்பா பெரியப்பா என்று பார்த்தால் அதுவும் நாலாகாது கூடும். அல்லது குறையும்.நூங்கள்ஙங்களைமதிக்கக்கூடிய ஆசிரியர்களாக இருக்குமோ என்று பார்த்தால் இன்றைறய பிள்ளைகளுக்கும் அவர்களின் தொகை மிக அதிகம்.

இவையெல்லாவற்றையும் கருத்தில் கொண்டு ஏற்கெனவே ஒரு பாடலை எழுதிவிட்டார் கண்ணதாசன். அது முதலில் கவிதையாக எழுதப்பட்டு குமுதத்தில் பிரசுரமாகி பின்னர் ஒரு சினிமாப்பாடலாகிவிட்டது. சரி அந்த நாலு பெரி ஆராம்' அவையள்தான் உயிர் பிரிந்தபிறகு வெறும் உடலாகப்போகும் எங்களுக்கு, அவர் இவர் என்று பெயர் சுட்டி அழைத்ததுபோய்ஆதுஎன்றுகுறிக்கப்படும் சவமாகிய பின்னும் இந்த உடலை தோள் கொடுத்துதூக்கிச்செல்லவிருக்கும்நாலுபேர்.

ஒருமனிதன்ஒரளவுக்காவதுமனிதனாக வாழ்ந்தால்தான் நாலு பேர் மனமுவந்து தோள் கொடுக்க முன்வருவார்கள். என்பது கருத்து.

இன்றைய சவத்துக்கு தோள்கொடுப்பார் இல்லாமல் போயிற்று என்கிறீர்களா? அதை பெட்டியில்வைத்து சடங்கு செய்து, வாகனத்தில் ஏற்றவும்,பின்னர் சுடலையில் இறக்கவும்கூட தோள்கொடுக்க வேண்டுமல்லவா.ஆகஅந்தநிலைஇன்னும் இருக்கிறது என வைத்துக்கொள்வோம்.

தோள் கொடுப்பவன் தோழன். இன்று நாம் மேட்டிமையான குடும்பத்தில் சாவு நடந்தால் அங்கோ தோள் கொடுக்க பலர் போட்டியிடுவதை காண்கிறோம். சில இடங்களில் பெண்களே நிறைந்திருக்க இந்த தோள் கொடுக்க ஆளில்லாமல் முதியோர்கள்கையைப்பிசைவதும்உண்டு.

இதெல்லாம்மனிதர்களுக்குத்தான்.நாம் தோள்கொடுக்கு முந்துறும் இன்னுமொரு இடம் சுவாமி ஊர்வலம்.

முற்காலத்தே ஐயர் பூசை செய்யாமல் ஊரவர்களே பூசெய் செய்யும் கோவில்கள் அதிகம். அந்த கோவில்களில் பலவருடாந்த திருவிழாக்காலங்களில் அந்தந்த கிராம வீதிகளில் பெருமளமான இடங்களுக்கு ஊர்வலமாக கொண்டு செல்வார்கள். இந்த ஊர்வலம் வரும் காலங்களில் அரசாங்கத்தையோ பிரதேச சபையையோ கூப்பிடாமல் மக்கள் தத்தமது காணிகளுக்கு நேராக வீதிகளை பற்றைகள் வெட்டி புல் செதுக்கி பள்ளங்களை நிரப்பி அலங்கரித்து வைப்பார்கள்.

அதுமட்டுமல்லஊர்வலம்வரும்நாளில் வாசலில் நிறைகுடம் வைத்து பூசை செய்ய, பூ வைத்து சுண்டலோ, பொங்கலோ, அவலோ வைத்து வழிபடுவார்கள். சுவாமி வழிநடந்து செல்லாது தோளில்சுமப்பார்கள் பின்னர் ஐம்பதுகளில் மாட்டுவண்டி வந்தது. அறுபதுகளின் ஆரம்பத்தில் உழவுயந்திரத்தில் சுவாமியை தூக்கி வந்தார்கள். வருடம் ஒரு முறையாவது வீதிகளும் சுத்தமாயின. புஶ்ரீராமணர்கள் பூசெய் செய்ய தொடங்கியதும் சுவாமி கர்ப்பக்கிரகத்துள் அடைபட்டுப்போனார். அதுவே மக்களுக்கு தமது செல்வத்தை பறைசாற்றுவும் ஏதுவாயிற்று.

கோவில் உட்பிரகாரத்தில் சுவாமியை கைளிலும் தோளிலுமாக ஏந்திவந்து வெளியே சகடத்தில் வைப்பதும் அன்றைய வழமை. இன்று பாவம் எவ்வளவு பெரிய அருள்மிகு சுவாமி ஆனாலும், தோள்கொடுக்க மனிதர்கள் இல்லை. உட்பிரகாரத்திலேயே வண்டியிலேற்றி ( சித்திரத்தேர்) இந்த தேர்களும் பளபளக்கும் லைட்டுகளும், திரைச்சீலைகளும் மனிதர்களால் கடவுளுக்கு உபயமாக வழங்கப்பட்டுள்ளது. அவ்வளவுதான் உங்களுக்குமட்டும்கடவுளால்என்னவழங்க முடியும். என்று நினைத்துக் கொள்வேன்.

## பார்வை

ஆலயங்கள்பற்றியகுற்றங்குறைகளை சொல்லக்கூடாது என்று என் தந்தை சொல்லியிருக்கிறார். அவர் இருந்த காலத்திலும் அவர் இல்லாதபோதும் என்னால் அவரது கட்டளைகளை மீற முடிந்ததில்லை. என்ற போதிலும் மாதா கோவிலில்அங்கப்பிரதட்சணம்செய்யலாமா என்பதுஎனக்குள் இருக்கும்பெருங்கேள்வி. நான் அன்னை வேளாங்கண்ணியின் சந்நிதானத்தில்மொட்டைபோடுவோரையும் அர்ச்சனைத்தட்டுகொண்டுவருவோரையும், தேங்காய் உடைப்பவர்களையும் கண்டிருக்கிறேன்.அதைசர்வமதஸ்தாபனம் என்றே சொல்கிறார்கள்.

நமது ஊரில் அப்படி எதுவும் இல்லையாயினும் பணத்தால் கடவுளை திருப்தி செய்ய முடியும் என்பதைவிட அங்கும் தமது மேல்நிலையை பலப்படுத்திக்கொள்ளலாம் என வாழ்வோரும் அதிகம். இப்போது நாம் தொடக்கத்துக்கு வருவோம்செல்வம்என்பதுஅனைவருக்கும் தேவையான முக்கியமான பொருள். நாம் எந்த நிலையிலும் எமது கவுரவத்தை மற்றவர்களின் முன் விட்டுக்கொடுத்தல் ஆகாது.

ஆகவே நாம் உழைக்கவும் உழைத்த பணத்தை சிக்கனமாக செலவழிக்கவும், கணிசமான தொகையை சேமிக்கவும் பழக வேண்டும்.

சேமிப்பு என்ற சொல்லை நான் இப்போதெல்லாம் வங்கியின் சேமிப்பு புத்தகத்தில் மட்டும்தான் பார்க்கிறேன். எங்கு பார்த்தாலும் கடன் கடன் கடன் என்ற பதாகைகள்தான்.

நகைக்குகடன், வாகனத்திற்கு கடன், வீட்டிற்கு கடன், தொழிலுக்கு கடன் என எத்தனை வகைகளிலெல்வாம் மக்களை கவர முடியுமோ அத்தனை வகையிலும் கடன் வழங்குகிறார்கள். தொழிலை ஆரம்பிக்கும்போதே கடனென்றால் வருமானம் என்னவாகும் அவர்கள் யாருக்காக எதற்காக உழைகை;கிறார்கள். கடனைக் கொடுத்தவர் அறாவட்டியுடன் அதை வசூலிக்கவும் செய்கிறார்கள.; உழைப்பது வட்டிகட்டவே முடிந்து விடுகிறது. என்று எடுத்தவர்கள் கவலைப்படுகிறார்கள். வாங்கியகடனைகட்டமுடியாமல்ஊரைவிட்டே ஓடுகிறார்கள்.

முற்காலமல்ல இக்காலத்திலும் அன்றாடம் உண்டியல் போட்டு பணம் சொ்த்து சுற்றுலா செல்பவர்களை நாம் காணவில்லையா? நாங்கள் உண்டியல் பொடுவோம். துபாற்கந்தோரி சேமிப்பில் முத்திரை வாங்கி ஒட்டுவோம் பத்துரூபா சேர்ந்ததும் அதைசேமிப்பு புத்தகத்தில் போடுவோம் அம்மா சீட்டுக்கட்டுவார் சீட்டுக்காசு வரும்போது அது வீட்டின் முக்கிய செலவுக்கு கை கொடுக்கும். இப்போதும் சீட்டு போடுகிறார்கள். ஆனால் சீட்டை எடுத்தபின் காசு கட்டுவதை மறந்து போகிறார்கள். கடன் என்ற சொல்லின் எதிர்ப்பதமாக வல்லாமல் ஒத்த கருத்தாக ஏமாற்றல்என்றுகுறிக்கலாம். நேர்மையீனம் தொற்று நோய்போல விரவிக்கிடக்கிறது.

சேமிப்பு பெருகாதவரை அபிவிருத்தி கிடையவே கிடையாது.


# தமிழர் பொருண்மியத்தில் உங்கள் விளம்பரங்களைப் பிரசுரிக்க...

## கட்டணவிபரம்

| | கறுப்பு வெள்ளை | வர்ணம் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.10,000/- | ரூ.20,000/- |
| அரைப்பக்கம் | ரூ.6,000/- | ரூ.12,000/- |
| காற்ப்பக்கம் | ரூ.3,500/- | ரூ.8,000/- |
| வரி விளம்பரம் | இலவசம் | இலவசம் |

தமிழர் பொருண்மியம்,
கிறீன் மீடியா ஹவுஸ்,
68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

வாட்ஸ் அப் இலக்கம் +94 777 920 384

# 2025 ஆம் ஆண்டிற்கான இலங்கை வரவு செலவுத் திட்டம்:

## பொருளாதார மேம்பாடு, முதலீடு, மற்றும் சமூக நலத்திட்டங்கள்

2025 ஆம் ஆண்டிற்கான இலங்கை அரசின் வரவு செலவுத் திட்டம் (யற்-ஆளமி 2025) நாட்டின் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க, முதலீட்டுகளை ஊக்குவிக்க, வேலைவாய்ப்பை அதிகரிக்க, மற்றும் சமூக நலத்திட்டங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு, மிடுக்கு மற்றும் நிலைத்தன்மையை ஏற்படுத்தும் நோக்கில் இந்த வரவு செலவுத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த வரவு செலவுத் திட்டம் நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் வலுவாக மாற்றவும், முதலீடுகளை அதிகரிக்கவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், சமூக நலத்திட்டங்களை மேம்படுத்தவும் கவனம் செலுத்துகின்றது. வரி மற்றும் நிதி கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மூலமாக அரசின் வருவாய் அதிகரிக்கப்படும். மேலும், வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிக்க அரசு புதிய முயற்சிகளை மேற்கொள்கின்றது.

## பொருளாதார வளர்ச்சி மற்றும் நிதி நிலைமை

2022 இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை சமாளிக்க, இலங்கை அரசு பல நிதி மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்த நடவடிக்கைகளின் விளைவாக, 2025 ஆம் ஆண்டில் இலங்கை பொருளாதாரம் 5% வரை வளர்ச்சி அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பணவீக்கம் 2025 ஜனவரியில் 4% ஆக குறையும் என கணிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு நாணயக் கையிருப்புகள் 6.1 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளன, இது நாட்டின் பொருளாதார நிலைமையை சீராக மாற்றுவதற்கு வழிவகுக்கின்றது.

## வரிவிதிப்பு மற்றும் நிதி கட்டுப்பாடுகள்

அரசின் வருவாயை அதிகரிக்க, புதிய வரி மறுசீரமைப்பு நடைமுறைக்கு கொண்டு வரப்பட உள்ளது. குறிப்பாக,

வருமான வரி விதிப்பு மற்றும் கலால் வரியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி வரியை சில பிரிவுகளில் குறைத்து, உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கில் முதலீட்டு பாதுகாப்பு சட்டம் (Investment Protection Act) உருவாக்கப்பட உள்ளது.




2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில், பின்வரும் முக்கிய வரி மாற்றங்கள் முன்மொழியப்பட்டுள்ளன:

இந்த வரி மாற்றங்கள் மூலம், அரசாங்கம் கூடுதல் வருவாய் ஈட்டவும், அதே நேரத்தில் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் எதிர்பார்க்கின்றது.

## வருமான வரி மாற்றங்கள்

தனி நபரின் வருமான வரி கணக்கீடு மாற்றங்கள்

ஏப்ரல் 1, 2025 முதல் தனிநபர் தனிப்பட்ட நிவாரணம் ரூ. 1,200,000 இலிருந்து ரூ. 1,800,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

2வது ஸ்லாப் (2nd slab) ரூ. 500,000/- வரிவிதிப்பு ÷ 12% நீக்கப்பட்டு, 6% வரியுடன் காணப்படும் 1வது ஸ்லாப் (1st slab) ரூ. 500,000/- தற்போது ரூபாயாக 1,000,000/- அதிகரிக்கப்பட்டுள்ளது.

## தனிநபரின் வருமான வரி தொடர்பான பிற மாற்றங்கள்

தற்போது வருமான வரியில் இருந்து



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

விலக்கு அளிக்கப்பட்டுள்ள எந்தவொரு நபரின் சேவைகளின் ஏற்றுமதிகளுக்கு 15% வரி விதிக்கப்படும்.

வட்டி மற்றும் தள்ளுபடி வருமானத்திற்கான நிசுஷிவீ வரி விகிதம் 5% லிருந்து 10% ஆக உயர்த்தப்படும்.

மூத்த குடிமக்களுக்கு (Senior citizens) வரி மதிப்பிடத்தக்க வருமானம் (AI) ரூ. 1,800,000/ வரையில் அல்லது அதற்கு குறைவாக இருக்குமாயின், எழுத்து மூல அறிவிப்புகளைப் பெற்றவுடன், அவர்களின் வட்டி வருமானத்திற்கு தடுத்து வைத்தல்வரி (WHT) அறவிடப்பட மாட்டாது.

மூத்த குடிமக்கள் அல்லாதவர்களுக்கு (ஹிலிஜ-விளஜஷ்லிஷெளீஷ்மிஷ்குளஜவி) வரி மதிப்பிடத்தக்க வருமானம் (AI) ரூபாய் 1,800,000/ வரையில் அல்லது அதற்குக்



குறைவாக இருக்குமாயின், னூயும் இன் வரி தணிக்கை இல்லாமல் 3 மாதங்களுக்குள் வட்டியில் கழிக்கப்பட்ட நிகூஷிவீ திரும்பப் பெற உரிமை உண்டு.

Y/A 2024/2025 முதல், மூத்த குடிமக்கள் தங்கள் வருமான வரிக் கோப்புகளை கைமுறையாக (Manually) தாக்கல் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

தனிநபர்கள் மற்றும் கூட்டாண்மை மூலதன ஈட்டுகை வரி (CGT) விகிதம் 10% லிருந்து 15% ஆக உயர்த்தப்படும்.

மற்ற அனைவரின் (தனிநபர்கள் மற்றும் கூட்டு அல்லாதவர்கள்) மூலதன ஈட்டுகை வரி (CGT) விகிதம் 30% ஆக நிர்ணயிக்கப்படும்.

w.e.f. ஜூலை 2025, எந்த மூத்த குடிமகனுக்கும் ரூ. 1துஜ வரையிலான வைப்புத்தொகைகளுக்கு 3% கூடுதல் வட்டி வருமானம். (ஆதாயம் ≤Rs.30,000p.a.)

## வருமான வரி தொடர்பான பிற மாற்றங்கள்

2025/26 முதல் மதிப்பீடப்பட்ட செலுத்தத்தக்க வருமான வரிக் கூற்று (SET) தாக்கல் செய்வதற்கான தேவை நீக்கப்படும்.

## மதிப்பீடப்பட்ட செலுத்தத்தக்க வருமான வரிக் கூற்று

மதிப்பீடப்பட்ட செலுத்தத்தக்க வருமான வரி தவணைகளை கணக்கிடுவதற்கு 'உடனடியாக முந்தைய ஆண்டு அடிப்படையில்' அறிமுகப்படுத்தப்படும்.

## வரி மன்னிப்பு (Tax Amnesty)

இந்த திருத்தத்தை சட்டப்பூர்வமாக்கிய 6 மாதங்களுக்குள் மொத்த வரி செலுத்தப்பட்டால், Y/A 2022/2023 அல்லது அதற்கு முன் ஏற்பட்ட வரிப் பொறுப்பு மீதான வட்டியை (2017 இன் எண். 24 இன் உள்நாட்டு வருவாய்ச் சட்டம் மற்றும் 2022 இன் கூடுதல் வரிச் சட்டம் எண்.14) இன்படி தள்ளுபடி செய்ய ளீறூாணுாயூ அங்கீகரிக்கப்படும்.

சொத்துக்கள் மீதான சுமத்தப்பட்ட (Imputed Tax on properties) வரியை நடைமுறைப்படுத்துவது இடைநிறுத்தப்படும்.

## VAT தொடர்பான மாற்றங்கள்

டிஜிட்டல் தளங்களில் வழங்கும் சேவைகளுக்கு 18% VAT அறிமுகம்.

இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி முறைமை / SVAT ஐ அகற்றுதல் மற்றும் ஆபத்து அடிப்படையிலான பணத்தைத் திரும்பப்பெறுதல் செயல்முறையை எளிதாக்குதல்.

கேளிக்கைவரியானதுதிரைப்படக்கண்காட்சி சேவைகளில் வரும் ராபுவீ வரிக்கு உட்பட்ட விநியோக மதிப்பில் கழிக்க அனுமதிக்கப்படும்.

சுனாமி திட்டங்களின் கட்டுமான ஒப்பந்ததாரர்கள் மீதான VAT செலுத்த வேண்டியவை தள்ளுபடி செய்யப்படும்.

திட்டங்களுக்கான மூலதனப் பொருட்களை இறக்குமதி செய்வதில் VAT மீதான உள்ளீட்டு வரிவிலக்கைஅனுமதிக்காதது ஒத்திவைக்கப்பட்ட VAT முறைமை அமுல்படுத்தப்படுகின்றது .

ராபுவீ பதிவு செய்யப்பட்ட நபர்களால் பாயின்ட் ஆஃப் சேல் (Point of Sale) (POS) இயந்திரங்களை கட்டாயமாகப் பயன்படுத்துதல்.

## VAT இல் இருந்து விலக்கு பெறுவதற்கான படிகள்;

இலங்கையில் மருந்து மற்றும் ஆயுர்வேத மருந்துகளின்உற்பத்திக்காகஉற்பத்தியாளர்களால் பேக்கிங் பொருட்களை இறக்குமதி செய்தல்.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழ் 'மூலோபாய முக்கியத்துவம்வாய்ந்தவணிகமாக'அடையாளம் காணப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு வணிகத்திற்கும்பொருட்கள்மற்றும்சேவைகளை வழங்குதல்.

தயிர் மற்றும் பிற பால் பொருட்கள் (Yogurt and other Dairy Products).

## முத்திரைத் தீர்வை தொடர்பான மாற்றங்கள்

குத்தகைக்கு/வாடகைக்கு எடுக்கும் எந்த ஒரு கருவியின் முத்திரை வரி ரூ. 10லிருந்து. ரூபாய்க்கு 1,000 முதல் ரூ. 20 ரூபாய்க்கு 1,000 அல்லது அதன் ஒரு பகுதி அதிகரிக்கப்படும். (அதாவது 1% முதல் 2% வரை அதிகரிப்பு)

## பந்தய மற்றும் சூதாட்ட விதிப்பனவு

பந்தய மற்றும் சூதாட்ட விதிப்பனவு 15% இல் இருந்து 18% ஆக உயர்த்தப்படும்.

கேசினோ நுழைவு கட்டணம் USD 50 இலிருந்து USD 100 ஆக உயர்த்தப்படும்.

## அரசு ஊழியர்களின் ஊதியத் திருத்தங்கள்

2025, 2026 & 2027 ஆண்டுகளில் அரசு ஊழியர்களின் ஊதியம் மூன்று கட்டங்களாக உயர்த்தப்படும்;

3 வருடங்களின் முடிவில் ஒரு மாதத்திற்கு குறைந்தபட்ச அதிகரிப்பு;

பொதுத்துறை ரூ. 8,250

பல்கலைக்கழகங்கள் ரூ. 8,253

SOEகள் ரூ. 10,750

## ஓய்வூதியதாரர்களின் ஊதியத் திருத்தங்கள்

அரசு ஓய்வூதியர்களின் ஊதியத்தை கட்டமைக்கப்பட்ட முறையில் அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

மேலும், 2025 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் வரவு செலவுத் திட்டம், நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கும், நிலையான வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்குமான ஒரு விரிவான திட்டமாகும். இந்தத் திட்டம், அனைத்து மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் தொழில் வளர்ச்சி

முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக பல்வேறு முன்னெடுப்புகள் எடுக்கப்பட்டுள்ளன:

ஏற்றுமதி மேம்பாட்டு திட்டம் (2025–2029) – இலங்கைபொருளாதாரத்தைசர்வதேசசந்தையில் அதிகரிக்கஇந்ததிட்டம்செயல்படுத்தப்படஉள்ளது.

அரசதனியார்கூட்டாண்மை(PPP)திட்டங்கள் –புதிய தொழில்துறை வளர்ச்சி மற்றும் தொழில் வாய்ப்புகளை உருவாக்க அரசும், தனியாரும் இணைந்து செயல்பட உள்ளனர்.

பொதுமக்கள் பயன்பாட்டிற்கான புதிய உள்கட்டமைப்புகள் – சாலை, ரயில்வே, துறைமுகங்கள் போன்றவை விரிவுபடுத்தப்பட உள்ளன.

## சமூக நலத்திட்டங்கள் மற்றும்

## வாழ்க்கைத் தர மேம்பாடு

வறியவர்களுக்கு அரசாங்கம் அதிக முக்கியத்துவம் வழங்கியுள்ளது. முக்கியமான சமூக நலத் திட்டங்கள்:

வறியவர்களுக்கு மாத சம்பள உதவி ரூ.8,500 – ரூ.10,000 வரை அதிகரிக்கப்படும்.

இலவச மருத்துவ சேவைகள் மற்றும் உணவுப் பாதுகாப்பு திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பை அதிகரிக்க புதிய தொழிற்சாலைகள், தொழில் பயிற்சி மையங்கள் மற்றும் வேலைவாய்ப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

## உட்கட்டமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு

நீர்மேலாண்மை மற்றும் விவசாய திட்டங்கள் – நாட்டின் நீர்ப்பாசன அமைப்பை மேம்படுத்த ரூ.74,500 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

பசுமை ஆற்றல் மேம்பாடு – மின்சார ஆற்றலை அதிகரிக்க நவீன சூரிய மற்றும் காற்றாற்றல் திட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளன.

கிழக்கு மற்றும் மேற்குக் கடலோர அபிவிருத்தி – கடலோர பகுதிகளில் சுற்றுலா மற்றும் வணிகத்துறைகளை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கையின் 2025 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம், நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கும், நிலையான வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்குமான அரசாங்கத்தின் முக்கிய கொள்கைகளை உள்ளடக்கியது. இந்த வரவு செலவுத் திட்டம், பொருளாதார ஸ்திரத்தன்மை, உற்பத்தி விரிவாக்கம், சமூக சமத்துவம், டிஜிட்டல் பொருளாதாரம், மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளது.

## பொருளாதார ஸ்திரத்தன்மை:

நிதி முகாமைத்துவத்தை வலுப்படுத்துதல்: அரசாங்கத்தின் வருவாய் மற்றும் செலவுகளை சரியாகக் கையாண்டு, நிதிப் பற்றாக்குறையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட் டுள்ளன.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல்: அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கும், பணவீக்கத்தைக் குறைப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடன் முகாமைத்துவம்: நாட்டின் கடன் சுமையைக் குறைப்பதற்கும், கடனை சரியான முறையில் நிர்வகிப்பதற்கும் புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

## உற்பத்தி விரிவாக்கம்:

விவசாயத்துறை மேம்பாடு: விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்கும், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவதற்கும் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் நவீன விவசாய முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தொழில்துறை வளர்ச்சி: உள்நாட்டுத் தொழில்களை மேம்படுத்துவதற்கும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் பல்வேறு சலுகைகள் மற்றும் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சேவைத்துறையின் விரிவாக்கம்: சுற்றுலா, தகவல் தொழில்நுட்பம், மற்றும் நிதிச் சேவைகள் போன்ற சேவைத் துறைகளை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் வகுக்கப் பட்டுள்ளன.

## சமூக சமத்துவம்:

கல்வி: கல்விக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், அனைத்து குழந்தைகளுக்கும் தரமான கல்வி கிடைப்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சுகாதாரம்: சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்கும், அனைத்து மக்களுக்கும் சுகாதார வசதிகள் கிடைப்பதை உறுதி செய்வதற்கும் புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

சமூக நலத் திட்டங்கள்: முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள், மற்றும் விதவைகள் போன்ற சமூகத்தின் நலிந்த பிரிவினருக்கு உதவ பல்வேறு சமூக நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

## டிஜிட்டல் பொருளாதாரம்:

டிஜிட்டல் தொழில்நுட்ப மேம்பாடு: டிஜிட்டல் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கும், அதன் பயன்பாட்டை அதிகரிப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இ-காமர்ஸ் ஊக்குவிப்பு: இ-காமர்ஸ் துறையை மேம்படுத்துவதற்கும், அதன் மூலம் வணிகத்தை எளிதாக்குவதற்கும் புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

டிஜிட்டல் சேவைகள்: அரசாங்க சேவைகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கும், மக்களுக்கு எளிதாகக் கிடைக்கச் செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு:

பசுமை தொழில்நுட்பம்: பசுமை தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டை அதிகரிப்பதற்கும் பல்வேறு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு: காடுகள் மற்றும் வனவிலங்குகளைப் பாதுகாப்பதற்கும், சுற்றுச்சூழலை மேம்படுத்துவதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம், இலங்கையின் பொருளாதார நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்கும், பன்னாட்டு சந்தையில் நம்பிக்கையை மீண்டும் உருவாக்குவதற்கும் முக்கியமான ஒன்று. சமூக நலத்திட்டங்களை வலுப்படுத்தும் இந்தப் பொருளாதார நடவடிக்கைகள், நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு வலுசேர்க்கும். ஆனால், இதன் செயல்பாடுகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டால் மட்டுமே மக்களுக்கு நேரடியாக பயனளிக்கும் என்பதால், நடைமுறையில் எவ்வளவு வெற்றியடையும் என்பது அவதானிக்க வேண்டிய விடயமாகும். பொதுமக்கள் கவனிக்க வேண்டியது – வரி விதிப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மக்களின் தினசரி செலவுகளையும், வருமான நிலைமையையும் நேரடியாக பாதிக்கக்கூடும். இதனால், அரசு வழங்கும் நிவாரண திட்டங்களின் செயல்பாடு முக்கியமானதாகும். மேலும், வரிசெலுத்துவோரின் பொறுப்புகள் அதிகரிக்கப்பட வாய்ப்புள்ளது, எனவே புதிய வரிவிதிப்புகளை மக்கள் தெளிவாக புரிந்துகொள்வது அவசியமாகும்.

+94-777-802-900
| Email: swaminathan@agsarma.com



# செத்தல் மிளகாயில் ஆபத்தா?

கனகசபாபதி வாசுதேவா MBBS,
Post Graduate Diploma in Legal Medicine (DLM ), MD
(Forensic Medicine)



(குறிப்பு :– இப்பதிவில் உள்ள படம் வீட்டுத் தோட்டம் செய்பவர் ஒருவரால் நெற்றுக்கு விட்டதாக பகிரப்பட்டது. அதை விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கோடு இங்கு பகிரப்படுகிறது. இதை உண்பதோ, கையாள்வதோ, நடவு செய்வதோ பின்விளைவுகளைத் தரும் என்பதனை Farm to Table அறிவுறுத்துகிறது.)

அண்மையில் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட செத்தல் மிளகாயில் aflatoxin என்ற புற்று நோயினை உருகவாகும் மிலிமுஷ்ஜ கண்டறியப்பட்டது. இவ்வாறு கண்டறியப்பட்ட செத்தல் மிளகாய் தனியார் களஞ்சியங்களில் இருந்து பாரிய அளவில் அதாவது 20 மெட்ரிக் தொன் என்ற அளவில் மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதாவது உரிய தரச் சான்றிதழ் வரமுன்னரே இவ்வாறு விடுவிக்கப்பட்டு விற்பனைசெய்யப்பட்டுள்ளது .

இந்த செத்தல் மிளகாயில் என்ன பதார்த்தம் உள்ளது? அது ஏவ்வாறான விளைவுகளை மனித உடலில் ஏற்படுத்தும்? என்பது பற்றி பார்ப்போம். இவ்வாறு செத்தல் மிளகாயில் இருந்தது aflatoxin என்ற mycotoxin ஆகும். இது பங்கசு (பூஞ்சன) வகையான Aspergillus flavus, Aspergillus parasiticus , Aspergillus nomius போன்றவற்றில் இருந்து இயற்கையாக வெளியே சுரக்கப்படும் பதார்த்தம் ஆகும். இது மற்றைய பங்கசு வகைகள் மற்றும் நுண்ணுயிரிகள் வளர்வதை தடுக்கும். இதில் aflatoxins, ochratoxins, citrinin, ergot alkaloids, patulin, Fusarium toxins போன்ற பல்வேறு வகைகள் உண்டு.

Aflatoxin மட்டும் 18 வகையான உப வகைகள் உண்டு. இதில் aflatoxin b1 என்பதே மிகவும் ஆபத்தானது, இது உயிழிவிவி 1 என்ற carcinogen (புற்று நோயினை உருவாக்கும் காரணி) ஆக வகைப் படுத்தப்பட்டுள்ளது. அதாவது உயிழிவிவி 1 என்றால் இந்த பதார்த்தம் அடங்கிய உணவு பொருட்களை உட்கொண்டால் நிச்சயமாக புற்று நோய் உண்டாகும் சாத்தியம் உள்ளது. முக்கியமாக ஈரல் புற்று நோய் உருவாகும். இந்த ழிசுஷீயிழிமிலிமுஷ்ஜ ஆனது வெப்பத்தினால் அழிவடையாது அதன்காரணமாக சமைத்த பின்னரும் இரசாயன ரீதியில் உயிர்ப்பாக காணப்படும். மேலும் இவ்வாறு ழிசுஷீயிழிமிலிமுஷ்ஜ இனால்பழுதடைந்த உணவுகளை உட்கொண்ட பசுக்களின் பாலில் aflatoxin b1 இன் பக்க விளைபொருள் ஆகிய aflatoxin m1 கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதில் இருந்து aflatoxin எவ்வளவு ஆபத்தானது என்பதை இலகுவாக விளங்கிக்கொள்ளலாம்.

முக்கியமாக Aspergillus flavus என்ற பங்கசு தானியங்களான சோளம், கச்சான், அரிசி, மிளகு, செத்தல் மிளகாய் போன்றவற்றில் இயற்கையாக வளரும். முக்கியமாக மேற்குறித்த தானியங்களினை வெப்பமான ஈரலிப்பான இடங்களில் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் பொழுதும், மழை நாட்களில் அறுவடை செய்யும் பொழுதும் இந்த பங்கசு தொற்றி கொள்ளும்.

தற்போதைய காலங்களில் பெரும்பாலான வீடுகளில் கறி மிளகாய்த் தூள் செய்வதில்லை மாறாக கடைகளில் இருந்தே வாங்குகிறோம் இவ்வாறு வாங்கும் சந்தர்ப்பங்களில் இவ்வகையான பங்கசு தொற்றுக்கு உள்ளான செத்தல் மிளகாய்களும் நிச்சயம் அரைக்கபட்டு தூளின் ஊடாக எமது உணவில் சேரும்..

இவ்வகையான தொற்றுதல் அடைந்த உணவுகளை உண்பதினால் என்ன சுகாதார சீர்கேடுகள் உண்டாகும்? புflatoxin இருக்கும் உணவுப் பொருட்களை உட்கொள்வதால் உண்டாகும் நிலை aflatoxicosis என்றழைக்கப்படும். இந்நிலையினால் ஈரல் புற்று நோய், ஈரல் அழற்சி (cirrhosis and Reye's syndrome), உணவுகள் சமிபாடு அடையாத்தனமை, போன்றன ஏற்படும்.

நாம் உண்ணும் உணவில் எந்த எந்த அளவில் ழிசுஷீயிழிமிலிமுஷ்ஜ இருக்கலாம்? பல்வேறு நாடுகளில் இதன் அளவானது 0-50mg/kg வரை வேறுபடுகின்றன. அமெரிக்காவில் 5mg/kg அளவினை விட அதிகரித்தல் ஆகாது . இலங்கையில் இது 15mg /kg ஆக இருக்கின்றது (Ref: Clarke's Analytical Forensic Toxicology).

இவ்வாறு இந்த பங்கசு பாதித்த உணவுகளை அடையாளம் காணுவது? மிளகாயில் கறுப்பு நிறத்தில் இருக்கும் விதைகள் , கச்சானில் கறுப்பு அல்லது பழுப்பு நிறத்தில் இருக்கும் பருப்புகள், சோளத்தில் கறுப்பு நிறத்தில் இருக்கும் பகுதி, தேங்காய் கொப்பராவின் பழுதடைந்த கறுப்பு நிறமாக பகுதி, வெங்காயம் மற்றும் உள்ளியில் கறுப்பு நிறத்தில் இருக்கும் பகுதி ஆகியன பங்கசினால் பாதிக்கபட்ட பகுதிகள் ஆகும் இவற்றினை மக்கள் உண்பதினை தவிர்ப்பது நல்லது.

எவ்வாறு இந்த பங்கசு தொற்றினை தவிர்ப்பது? நாம் மேற்குறித்த உணவுகளை களஞ்சிய படுத்தும் பொழுது உலர்ந்த, இரலிப்பற்ற இடங்களில் களஞ்சிய படுத்த வேண்டும். இலங்கை மக்களுக்கு இது பற்றிய போதிய அறிவு இல்லை. எம்மில் எத்தனை பேர் சமைக்கும் பொழுது பங்கசு தோற்றிய உணவு பகுதிகளை அகற்றி விட்டு சமைக்கின்றோம் என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம்.

# வல்லாரையில் கலப்படம்.

வல்லாரையானது கரட் சீரகம், செலரி மற்றும் பார்ஸ்லி போன்றனவற்றின் தாவர குடும்பத்தை சேர்ந்ததாகும். Centella என்பது வல்லாரை இனங்களின் பொதுப்பெயர் ஆகும். Gotu Kola என்னும் சிங்கள பெயர் பொதுவாக பல மொழிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். வல்லாரையின் பெயரில் போலி வல்லாரைகள் விற்பனைக்கு வந்துள்ளன. இங்கு ஒரே படத்தில் ஐந்து வெவ்வேறு வகைகளான தாவரங்களின் படங்களைஇணைத்துள்ளேன். அவற்றில் எதுவுமே வல்லாரைகளும் இல்லை வல்லாரைக்கு எந்த வகையிலும் உறவும் இல்லை. அவை Hydrocotyle எனப்படும் பிரபல்யமான நீர்த்தாவரங்கள் ஆகும். படத்தில் உள்ளது போன்ற Dollarwee-ஐ யாழ்ப்பாணத்தில் பயிருடுகிறார்கள். அதை வல்லாரை என்றே விற்பனை செய்கிறார்கள்.



Dollarwee- என்னும் தாவரத்தை தென்கிழக்குஆசியாஎங்கும்காணமுடியும். இதை இருபது வருடங்களுக்கு முன்னர் Ground cover பயிராக (not cover crop) அறிமுகப்படுத்தினர். அலங்காரநீர்த்தாவர வர்த்தகத்தாலும் பரவியுள்ளது. ஆனால் அவை விரைவாக ஆக்கிரமித்து அழிக்க முடியாத பயிராக மாறிவிட்டன. இவற்றை ஆடு மாடுகள் உண்பதால் ஈரல் பாதிக்கப் படுகிறது என்கின்ற அச்சத்தால் மக்களும் இதை உண்பதை தவிர்த்து வந்தனர். ஆனால் பின்னர் Liver fluke என்னும் ஒட்டுண்ணி அந்த தாவரத்தின் ஊடாக விலங்குகளுக்கு கடத்தப்படுகிறது என்பதைகண்டுபிடித்தனர். அதனால்தான் பிலிப்பீன்சில் இறைச்சிக் கடைகளில் ஈரல் விற்கப்படுவது மிகவும் அரிது. Liver fluke மனிதர்களையும் தாக்கும் வல்லமை கொண்டது.

Dollarweed என்னும் தாவரத்தை கூகுளில் தேடினால் அதை எப்படி அழிப்பது என்கின்ற கட்டுரைகள் வருமே ஒழிய எப்படி சம்பல்போடுவதுஎன்கின்றபேச்சே இருக்காது. அதே நேரத்தில் ஆலிலிஆயிளஇல் ஒரு பெரிய பிரச்சனையும் உண்டு. றூலிமிற் லுலியிழி அல்லது ளீளஜமிளயியிழி புவிஷ்ழிமிஷ்உழி என்று தேடினால் பதிக்குப் பாதி இந்த Dollarweed தான் வருகிறது. Dollarweedஐ வல்லாரையாக நினைத்து எழுதப்பட்ட நூற்றுக்கணக்கான கட்டுரைகள் உண்டு. செய்தித்தாள்கள் கூட பிரசுரித்துள்ளன. அமெரிக்காவில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்ட Dollarweedஐ ஆயுர் வேத மருந்தாக வேற எழுதியுள்ளார்கள். இதை பொடிசெய்துகூட றூலிமிற் லுலியிழி என்று மருந்தாக விற்பனை செய்கிறார்கள். இந்த தாவரத்தை எப்படி அழிக்கலாம் என்று பல நாட்டு விஞ்ஞானிகளும் பேசிக்கொண்டிருக்கும் போது நம்மவர்கள் இதை பயிருடுகின்றனர். இந்த தாவரம் மிகவும்வேகமாகநிலங்களை ஆக்கிரமிக்கக் கூடிய மண்ணுக்கு சொந்தம் இல்லாத விலங்குகளுக்கும் விவசாயத்துக்கும் சூழலுக்கும் பாதிப்பை ஏற்படுத்தவல்ல தாவரம் ஆகும். இதை தடை செய்வது பற்றி கடுமையாக சிந்திக்க வேண்டும்.



# வேளாண் செய்முறைகளில் செயற்கைப் பசளை இடுதலின் அவசியமும் உயிர் உரம்களும் (Bio fertilzer.)


வடகோவை வரதராஜன்

நவீன விவசாயச் செய்முறை, விளைவித்தல் என்ற சொல்லிற்கு அப்பால் 'உற்பத்தி' என்ற பதத்திலேயே வந்து நிற்கிறது. உற்பத்தியானது எப்போதும் நுகர்வு கலாச்சாரத்திற்காக சந்தையை நோக்கிச் செல்லும். அல்லது, உற்பத்தியானது சந்தையின் ஊடாக நுகர்ச்சியை நோக்கி செல்லும்.

பண்டைய விவசாயத்தில் உணவு பொருட்கள்விளைவிக்கப்பட்டன. 'உற்பத்தி' செய்யப்படவில்லை. விளைவிக்கப்பட்ட உணவுப் பொருட்கள் அந்தந்தக் குடும்பங்களாலும், அவர்களின்கால்நடை மற்றும் வளர்ப்பு பிராணிகளாலும் உண்ணப்பட்டு, அவற்றின் கழிவுப் பொருட்கள் அந்தச் சூழலிலேயே சேர்க்கப்பட்டன. இந்த நடைமுறையே காடுகளில் காணப்படுவதால் காடுகளின் கனிப்பொருள் வட்டம் சீர்குலையாமல் காடு எப்போதும் செழிப்பாகவே காணப்படுகின்றது.

எப்போது எமது எமது விளைப்பொருட்கள் சந்தையை நோக்கிச் செல்லத் தொடங்கியதோ, அன்று தொடக்கம் எமது மண்ணின் கனிப்பொருள் வட்டம் சீர் குலையத் தொடங்கி, மண்ணில் கனிப்பொருள் பற்றாக்குறை ஏற்படத் தொடங்கியது.

நான் முன்னர் எழுதிய தென்னைப் பயிர்ச்செய்கைபற்றியகட்டுரையொன்றில் பகிர்ந்த கீழ்வரும் கணக்கீட்டை ஒரு முறை அவதானியுங்கள்.







ஒரு ஏக்கர் தென்னந்தோட்டத்தில் 64 தென்னை மரங்கள் இருக்கும். அந்த 64 தென்னை மரங்களில் இருந்தும்

- ஓலை
- பாளை
- பொச்சு
- சிரட்டை
- பருப்பு
- இளநீர்

ஆகியவற்றின் மூலம்

- 46kg நைதரசன் (Nitrogen)
- 8.4kg பொஸ்பரஸ் (Phosphorus)
- 52.8kg பொட்டாஸ் (Potassium )
- 13.2kg மகினீசியம்

ஆகிய கனியுப்புக்கள் அந்த ஒரு ஏக்கர் தென்னம் தோப்பில் இருந்து ஒரு வருடத்தில் அகற்றப்படுகின்றன. இவை முறையே

- 100kg யூரியா
- 30.5kg சுப்பர்பொஸ்பேட்
- 88kg மியூரிடேட் ஒப் பொட்டாஸ்
- 55kg டொலமைட்

என்பவற்றிற்குச் சமனாகும். இவ்வாறு அகற்றப்பட்ட கனியுப்புக்கள் மீண்டும் அந்த தென்னம் தோப்பில் மீழ்சுழற்சியாக சேர்க்கப்படுகின்றதாஎன்றால்?

சேர்க்கப்படுவதில்லை.

அவை கொழும்புச் சந்தையைநோக்கிகொண்டுசெல்லப்பட்டு வேறுநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இவ்வாறு விளைபொருட்கள் தொடர்ந்து அந்த தென்னந்தோப்பிலிருந்து அகற்றப்பட்டு வெளிநாட்டு சந்தைக்கு ஏற்றுமதியானால்; அந்த தோப்பில் கனிப்பொருள் பற்றாக்குறை ஏற்பட்டு அந்த மண் வளம் குன்றுகின்றது.

## இயற்க்கை உரங்கள் இந்தக் கனிப்பொருள் வளத்தை ஈடுசெய்யுமா?

இந்ததென்னந்தோப்பிற்குசெயற்கைப் பசளை எதுவும் போடாமல் தனியே மாட்டெருவை மாத்திரம் இடுகின்றோம் என வைத்துக்கொள்வோம். 100வஆ மாட்டெருவில் உள்ள கனியுப்புக்கள் வருமாறு

- 1.22kg நைதரசன்
- 0.62வஆ பொஸ்பரஸ்
- 1.2வஆ பொட்டாஸ்

30வஆ மாட்டெருவை ஒரு தென்னை மரத்திற்கு போடும்பொது அது மரத்திற்கு தேவையான முழு அளவிலான நைதரசனை வழங்குகின்றது. ஆனால் மரத்திற்குதேவையானமுழுஅளவிலான பொஸ்பரஸ், பொட்டாஸ் என்பவற்றை வழங்குவதில்லை.

இதை ஈடுசெய்ய 500ஆ சபேஸ் பொஸ்பேட், 300ஆ மியூரியேட் ஒப் பொட்டாஸ் என்பவற்றை இட்டாலேயே மரத்திற்கு தேவையான முழு போசணைப் பெறுமானமும் கிடைக்கும்.

## உயிர் உரங்கள் ( Bio fertilizer) மரத்திற்கு தேவையான முழு






**போசனைப் பெறுமானத்தையும் வழங்குமா?**

காற்றில் உள்ள நைதரசனை கிரகித்து பயிர்களுக்கு வழங்குகின்ற செயன்முறையையே உயிர் உரங்கள் செய்கின்றன.

1. ரைசோபியம் (Rhizobium):- இது அவரைக் குடும்பத் தாவரங்களின் வேர்முடிச்சுக்களில் இயற்கையாக காணப்பட்டு காற்றில் உள்ள நைதரசனை கிரகித்து பயிர்களுக்கு வழங்குகின்றது.




2. அசட்டோபாக்ட்டர் ( Azotobacter) - இதை ஒருவித்திலை தாவரங்களின் விதைகளுடன் கலந்து விதைக்கும் போது ஒரு வித்திலை தாவர வேர்களில் தங்கி இருந்து காற்றில் உள்ள நைதரசனை கிரகித்து பயிர்களுக்கு வழங்கும். கரும்பு செய்கையில் நடவிற்கு முன் கரும்பு விதைத்துண்டங்கள் அசட்டோபாக்ட்டர் கலவையில் தோய்த்து நடப்படுகிறது.

3. அசோஸ்பைரில்லம் ( Azospirillum ) – இதை தானிய பயிர் விதைகளுடனும், மரக்கறிப் பயிர் விதைகளுடனும் கலந்து விதைக்கும் போது அப்பயிர்களின் வேர்களில் தங்கி இருந்து காற்றில் உள்ள நைதரசனை கிரகித்து பயிர்களுக்கு வழங்குகிறது.

4. நீலப்பச்சைப்பாசி ( Blue green alge ) :- அல்கா வகையைச்சேர்ந்த இத்தாவரம் நெல் வயல்களில் காற்றில் உள்ள நைதரசனை கிரகித்து பயிர்களுக்கு வழங்குகின்றது.

5. அசோலா ( Azolla) :- பன்னவகை தாவரமான இதுவும் காற்றில் இருந்து நைதரசனை கிரகித்து பயிர்களுக்கு வழங்குகின்றது. தற்போது கால்நடை தீவனமாகவும் இது பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றது.

6. பொஸ்போபாக்டீரியா ( Pseudomonas putida ) – பக்றிரியா வகையை சேர்ந்த இந்த உயிர் உரம் மண்ணில் காணப்படும் கரைய முடியாத பொசுபேற்றுக்களை கரையக்கூடிய பொஸ்பரஸ் ஆக மாற்றி பயிர்களுக்கு வழங்குகின்றது. மண்ணில் பொசுபேற்றுக்கள் காணப்படாவிட்டால் இந்த பக்டீரியாக்களால் எவ்வித பயனும் இல்லை. அதாவது இவை காற்றிலோ வேறு இடத்திலோ இருந்து பொஸ்பரஸை பெற்று மண்ணுக்கு வழங்குவதில்லை மண்ணில் பொசுபேற்று இருந்தாலே இது செயற்பட்டு பொஸ்பரஸை பயிர்களுக்கு வழங்கும்.

7. ரைக்கோடெர்மா விரிடி (Trichoderma viride ) :- இதை வெங்காயம், மிளகாய், கத்தரி, தக்காளி ஆகிய பயிர்களின் விதைகளுடன் விதைநேர்த்தி செய்து பயிரிடும் போது இது நாற்று அழுகல் நோயை கட்டுப்படுத்திடுகிறது.

ஆக மொத்தத்தில் உயிர் உரங்களால் பயிர்களின் நைதரசன் தேவையை மட்டுமே பூர்த்திசெய்ய முடியும். பொசுபரசு, பொட்டாசிய தேவையை பூர்த்தி செய்ய முடியாது.

தற்போதுள்ள வேளாண் செயன் முறையில் அளவிற்கு அதிகமான நைதரசன் உர பாவனையான மிகை யூரியா, மிகை அமோனியம் சல்பேற்று இடுதல் என்பனவே உணவையும் நீரையும் நஞ்சாக்குகின்றது. எனவே யூரியா, அமோனியம் சல்பேற்று ஆகிய நைதரச செயற்கைப் பசளைகள் பாவித்தலை நிறுத்தி அல்லது குறைத்து உயிர் உரங்கள் மூலம் பயிரின் நைதரசன் தேவையை நிறைவு செய்து கொண்டு; மற்றய மூலகங்கள் உள்ள செயற்கைப் பசளைகளான மியூரியேட் ஒவ் பொட்டாஷ்; சூப்பர் பொஸ்பேற் என்பனவற்றை சிபாரிசுக்கேற்ப பயன்படுத்துவதே, நஞ்சற்ற வெற்றிகரமான வேளாண்மைக்கு வழிவகுக்கும்.

# நெல் சாகுபடி தொடங்கப்பட்ட வரலாறு !!!

**உலகில் முதன் முதலாக ஆசிய நெல் (Oryza sativa), ஆப்பிரிக்க நெல் (Oryza glaberimma) என இருவகை நெற்பயிர்கள் பயிரிடப்பட்டன. ஆசியாவில் நெல் சாகுபடி கி.மு 4500க்கு முன்பாகவே பல நாடுகளில் ஒரே சமயத்தில் துவங்கியதாகக் கருதப்படுகிறது. மேற்கூறிய இருவகை நெல் இனங்களின் பொதுவான முன்னோடி காட்டு நெல் இனம் Oryza rufipogan ஆகும். ஆசிய நெல் சிற்றினம் இமயமலை அடிவாரத்தில் தோன்றியதாகக் கருதப்படுகிறது. இந்தியப்பகுதியில் Oryza sativa var. indica வும், சீனப்பகுதியில் Oryza sativa var. japonica வும் தோன்றின.**



இந்தியாவில் அவ்வையார் மற்றும் பல பழம்பெரும் புலவர்கள் பாடிய நெல் மற்றும் அரிசி பற்றிய பாடல்கள் பல உள்ளன. நெல் விளையும் பகுதிகளில், நெல் நடுதல், அறுவடை போன்ற காலத்தையொட்டி பண்டிகைகளும் கொண்டாடப்படுகின்றன. நெல் பற்றிய சில சமஸ்கிருத குறிப்புகளும் உள்ளன. சீனாவில் , விவசாயம், நெல் ஆகிய இரண்டையும் குறிக்கும் சொல் ஒன்றே (XXX) ஆகும்.

ஆப்பிரிக்காவில் நெல் சுமார் கி.மு 1500 முதல் பயிரிடப்பட்டு வருகிறது. கி.மு 1500 – 800 ஆம் ஆண்டுகளில், நைகர் நதித்துவாரத்தில் பயிரிடப்பட்டு, பின் செனெகல் நாடு வரை பரவியது. எனினும், இதன் சாகுபடி மேற்கொண்டு பரவவில்லை. அரேபியர்களால் கி.பி 7 – 11 ஆம் நூற்றாண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆசிய நெல் இனங்கள் பயிரிடப்பட்டன.

ஜப்பானில் நெற்பயிர் சீனாவிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டது என ஒரு சாரார் கருதுகின்றனர். ஆனால், ஜப்பானியர்கள் முன்னாளில் நீளமானதண்டுடைய, நீரில் வளரும் நெற்பயிர்களை படகில் சென்று அறுவடை செய்ததாக சில குறிப்புகளும் உள்ளன. உலர்நில (மானாவாரி) நெல் சாகுபடி கி.மு 1000 ஆம் ஆண்டு ஜப்பானில் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னாளில், கி.மு 300 இல் தற்கால நீர்நிலசாகுபடிமுறையாயோய்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது .

ஆசிய நெல் இனம் மத்திய கிழக்கு நாடுகளிலும் மத்திய தரைக்கடல் பகுதிகளிலும்சுமார்கி.மு800இல்பயிரிடத் துவங்கப்பட்டது. மவுரியர்கள் நெற்பயிரை ஸ்பெயின் நாட்டுக்கு அறிமுகப்படுத்தினர். 15 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நெல் இத்தாலி பிரான்ஸ் நாடுகளுக்கும் பின்னர் எல்லா கண்டங்களுக்கும் பரவியது.

1694இல் அமெரிக்காவின் தென் கரோலினா மாகாணத்தில், மடகாஸ்கரிலிருந்துநெல்அறிமுகமானது. புயலால் பாதிப்படைந்து ’சார்ல்ஸ்டன்’ என்ற துறைமுகத்துக்கு வந்த கப்பலின் தலைவர்ஒருநெல்மூட்டையைஅங்குள்ள விவசாயிகளுக்கு அன்பளிப்பாக கொடுத்தார். அவர்கள் அதனை பயிரிடத் தொடங்கினர். தென் அமெரிக்காவில் நெல் 18ஆம் நூற்றாண்டில் ஸ்பெயின் நாட்டவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

முந்தைய அமெரிக்காவின் தென் கரோலினா, ஜார்ஜியா மாகாணங்கள்,மேற்கு ஆப்பிரிக்காவிலிருந்து கொண்டு வரப்பட்ட கறுப்பின அடிமைகள் மூலம் நெல் பயிர் செய்து மிக அதிக இலாபம் ஈட்டினர். இவ்வடிமைகளுக்கு முன்னமே நெல் பயிர் பற்றிய அறிவு இருந்ததால், அதிக விலை கொடுத்து வாங்கப்பட்டனர். நில முதலாளிகள் அடிமைகளிடமிருந்து பாத்தி கட்டுதல், நீர் தேக்குதல் போன்ற உத்திகளை தெரிந்து கொண்டனர்.

முதலில் அமெரிக்காவில், நெல் கையால் (மர உலக்கை கொண்டு) குத்தப்பட்டு, பின் கூடைகளில் புடைக்கப்பட்டுஅரிசிபிரித்தெடுக்கப்பட்டது. இவ்வுத்திகளும்ஆப்பிரிக்கஅடிமைகளே அறிமுகப்படுத்தினர். பின்னர் 1787 இல், நீரால்இயங்கும்அரிசிஅரவைஇயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுநெல்சாகுபடிநல்ல இலாபம்ஈட்டியது. 20ஆம்நூற்றாண்டில், அமெரிக்க உள்நாட்டு போருக்குப் பின் அடிமைகள் இல்லாமையால் நெல் சாகுபடி குறைந்து விட்டது.

தமிழர் பொருளியம் வாரமலர் TAMILS ECONOMY



# மலைப்பழங்களின் ராணி –மங்குஸ்தான் பழம்

**‘பழங்களின் ராணி’ என அழைக்கப்படும் மங்குஸ்தான் பழம், மருத்துவ குணம் வாய்ந்தது. மலைப்பகுதியில், தோட்டப் பயிராக வளர்க்கப்படுகிறது**

**இலங்கையில் மழை காடுகளிலும் இதை இலவசமாக கிடைக்கிறது..**

**’பழங்களின் ராணி’ என அழைக்கப்படும் மங்குஸ்தான் பழம், மருத்துவ குணம் வாய்ந்தது. தென்னிந்திய மலைப்பகுதியில், தோட்டப் பயிராக வளர்க்கப்படுகிறது. இது மலேசியா, மியான்மர், இந்தோனேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் அதிகம் விளைகிறது. தென் அமெரிக்க நாடுகள், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளிலும் கிடைக்கிறது.**



தென்கிழக்கு ஆசிய நாடுகளில், பழங்காலத்தில் தோல், பற்களின் ஈறு நோய்களுக்கும், தொற்று நோய் கிருமிகளையும், காளான்களையும் அழிக்கவும்பயன்படுத்தினர். கம்ப்யூட்டரில் வேலை செய்பவர் களுக்கு, கண்கள் வறட்சிஅடைந்துஎரிச்சலைஉண்டாக்கும். இதனால் சிலர் தலைவலி, கழுத்து வலி என அவதிக்குள்ளாவார்கள். இவர்கள் மங்குஸ்தான் பழம் சாப்பிட்டு வந்தால் கண் எரிச்சல் நீங்கி, கண் நரம்புகள் புத்துணர்வு பெறும்.

மங்குஸ்தான் பழத்தில், எலும்புகளை பலப்படுத்தக்கூடிய நோய் எதிர்ப்புசக்தியை அதிகரிக்கச்செய்யும்மருத்துவகுணங்கள் உள்ளன. இந்த பழம், குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை கொடுக்கக் கூடியதாக விளங்குகிறது. எலும்புகள் பலவீனம், எலும்புகள் பலம் குன்றி காணப்படுவது, எலும்பு தேய்மானம் போன்றவற்றிற்கு இது சிறந்த மருந்தாக விளங்குகிறது.



வயதானவர்களுக்கு முழங்காலுக்கு கீழே ஏற்படும் பலவீனத்தை, பலப்படுத் துவதற்குமங்குஸ்தான்உதவிசெய்கிறது. கால்களில்ஜீவனற்றுஇருப்பவர்களுக்கும், இது சிறந்த தீர்வாக இருக்கும். நாட்பட்ட புண்கள், காயங்கள், காய்ச்சல், ரத்தம் கலந்த வயிற்றுப்போக்கு, உடல் மற்றும் மனச்சோர்வு, மன அழுத்தம், கவலை போன்றவற்றைகுணமாக்கமங்குஸ்தான் பழம் உதவுகிறது.

வீக்கம் குறைக்கவும், புற்று நோய் எதிர்ப்பு சக்தியை பெருக்கவும், தோல் சுருக்கத்தை குறைக்கவும், பாக்டீரியாமற்றும்வைரசுக்கு எதிர்ப்பாகவும் பயன்படுகிறது. உடல் சூட்டைத் தணித்து, தேகத்தை சமநிலையில் வைத்திருக்க உதவுகிறது. வயிற்றுவலியைக் குணப்படுத்தும் தன்மை இதற்கு உண்டு. சீதபேதி, ரத்தக் கழிச்சல் உள்ளவர்கள், மங்குஸ்தான் பழத்தின் மேல் தோலை சுட்டு அல்லது பச்சையாக அரைத்து, அதனுடன் தேன் கலந்து சாப்பிட்டால் உடனே குணமாகும்.

மங்குஸ்தான் பழத்தை சுவைத்து சாப்பிட்டு அல்லது அதன் தோலை காயவைத்து பொடி செய்து தேன் கலந்து, சாப்பிட்டுவந்தால்வாய்துர்நாற்றம்நீங்கும். வயிற்றுப்புண், வாய்ப்புண் குணமடையும். கிருமிகளைக் கொல்லும். சிறுநீர் நன்கு வெளியேற மங்குஸ்தான் பழம் சிறந்த மருந்தாகும். அதுமட்டுமல்லாமல் இருமலை தடுக்கும், சூதக வலியை குணமாக்கும், தலைவலியை போக்கும், நாவறட்சியை தணிக்கும்.

மாதவிலக்கு காலங்களில் பெண்களுக்கு ஏற்படும் அதிக ரத்தப் போக்கை குறைக்க உதவுகிறது. மங்குஸ்தான் பழத்தை சாப்பிட்டு வந்தால் மூலநோயால்ஏற்பட்டபாதிப்புகள்குறையும். சீசன்காலங்களில்மங்குஸ்தான்பழத்தை வாங்கி சாப்பிடுவது நல்லது.

# தமிழரின் பொருளாதாரங்களை துவம்சம் செய்துவரும் காட்டு யானைகள்.

வ.சக்திவேல்
சமூகஆய்வாளர்

'மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதிப்பதுபோல' தற்போதுகாட்டுயானைகள் கூட்டமாகவும்தனியாகவும்கிராமங்களுள், மக்களின் பயிர் பச்சைகளுக்குள்ளும், புகுந்த அப்பாவி மக்களின் உயிர்களையும், உடமைகளையும் குடியிருக்கும் வீடுகளையும் அழித்து வருவது மட்டுமல்லாமல், அவர்களது வாழ்வாதாரததிற்குத் துணை நிற்கின்ற தொழில்களையும் அழித்து வருவது என்பதுமிகவும்வேதனையானவிடயமே!

வயலும் வயல் சூழ்ந்த சூழலுமான மருதநிலமும், காடும் காடு சார்ந்த சூழலுமான முல்லை நிலமும், மலையும் மலைசார்ந்தசூழலுமானகுறிஞ்சிநிலமும் என மூவகை நிலங்களும் ஒருங்கே அமையப்பெற்றபிரதேசம்மட்டக்களப்பின் மேற்குப் பக்கமாக அமைந்துள்ள படுவான்கரைப் பிரதேசமாகும்.

கனியவளங்கள் இனிமையுடன் இயற்கையாகவே அமையப் பெற்ற ஓர் இயற்கைச் சாரல் வனப்பு மிக்க பிரதேசமே! மட்டக்களப்பு மாவட்டத்தின் அந்தப்படுவான்கரைப்பிரதேசம்என்றால் அது மிகையாகாது.

வளங்கள்யொலிக்கும்அந்தபடுவாங் கரைப்பிரதேசமக்கள் ஏனையவர்களைப் போல் சொகுசு வாழ்க்கை வாழவில்லை தாமும் தமது குடும்பமும் என உடனுக்கு உடன் உழைத்தே வாழ்நாளைக் கழித்து



வருகின்றனர். வேளாமைச்செய்கைக்கு மாத்திரமின்றி நிலக்கடலை. உழுந்து, சோளன், பயறு, மரவள்ளி, குரக்கன், கௌப்பி என பல மேட்டுநிலப் பயிர் செய்கைகளுக்கும் பெயர்போன இந்தப்பிரதேசம் வரலாறு காணதா பேரழிவுகளையும் கடந்த காலத்;தில் சந்தித்திருந்தது. என்றால் அவற்றை மறுக்கவோ, மறைக்கவோ, முடியாது.

இவற்றை எல்லாம் கடந்து தற்போதைய சுமூகமான சூழ்நிலையில் அப்பிரதேச மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்நிலையில் காட்டு யானைகளின் அட்டகாசங்களும் அவற்றினால் ஏற்படும் அழிவுகளும்அவர்களைவிட்டபாடில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள மிகப் பெரிய நிலப்பரப்பான பகுதியில் அமைந்துள்ளபடுவான்கரைப் பகுதியில் காட்டு யானைகளின் தொல்லைகளும் அட்டகாசங்களும் அடாவடித் தனங்ளும், நாளுக்கு நாள் அதிகரித்த வன்னமே! உள்ளன. அதிலும் எல்லையோரக் கிராமங்களான பாலையடிவட்டை, காக்காச்சிவட்டை, நெல்லிக்காடு, விவேகானந்தபுரம், திக்கோடை தும்பங்கேணி, இளைஞர் விவசாயத்திட்டம், களுமுந்தன்வெளி, புன்னக்குளம், சுரவணையடியூற்று, வெல்லாவெளி, விவேகானந்தபுரம், றாணமடு, சின்னவத்தை, தாந்தாமலை, கச்சக்கொடிச்சுவாமிமலை, நெல்லிக்காடு, புல்லுமலை, பாவக்கொடிச்சோனை, கண்டியனாறு, கரடியனாறு, போன்ற பல கிராமங்களிலேயே யானைகளின் அட்டகாசங்கள், தொடர்ந்தும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.



படுவான்கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள போரதீவுப்பற்று,



மண்முனை தென்மேற்கு, மண்முனை மேற்கு, ஏறாவூர் பற்று, வாகரை, கிரான், போன்ற பல பிரிவுகளில் மக்கள் செறிந்து வாழ்கின்றனர் விவசாயத்தினையும், கால்நடை வளப்புக்களையும், பிரதான தொழிலாகக் கொண்டுள்ள அங்குள்ள மக்கள் வீட்டுத்தோட்டம், கைத்தொழில், கோழிவளப்பு, செங்கல்; வெட்டுதல், கூலிவேலை செய்தல், போன்ற இதரதொழில்களையும் மேற்கொன்டு வருகின்றனர்.

வருடாந்தம் ஐப்பசி தொடக்கம் மாசிமாதம் வரையான காலப்பகுதிகளில் பெரும்போக வேளாமைச் செய்கைகளையும் தோட்டங்களையும் பரந்த அளவிலும், சித்திரை தொடக்கம் அடி மாதம் காலப்பகுதிகளில் சிறுபோக வேளாண்மைச் செய்கையையும் குறைந்த அளவிலான காலபோக வேளாண்மைச் செய்கையினையும் இந்தப்பகுதி மக்கள் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு மேற்கொள்ளும் தமது ஜீவனோபாயத்திற்கு மிகநீண்டகாலமாக இருந்து காட்டு யானைகளின்அட்டகாசங்கள்அதிகரித்தே வருகின்றன இதனால் எங்கிருந்தோ வருகின்ற காட்டுயானைகள் பூர்வீகத் தமிழர்களாகியஎமதுவாழ்வாதாரங்களை முன்றாக தினம் தினம் துவம்சம் செய்து வருவதாக அந்தப்பிரதேச மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

0நாங்கள் எமது கிராமத்திலிருந்து சுமார் 10 தடவைகளுக்கு மேல் இடம் பெயர்ந்து பற்பல இடங்களில் வழ்ந்து வந்தோம், இறுதியாக கடந்த 2007 ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்துள்ளோம். கடந்த யுத்தத்தினால் எமது மக்கள் சகல உடமைகளையும் இழந்துள்ளார்கள் தற்போதுகாட்டுயானைகள்எம்உறவுகளின் வீடுகளை அல்லும் பகலுமாக மாறிமாறி உடைத்து வருகின்றன. இதுவரை எமது பகுதியில் 5 பேருக்கு மேல் காட்டு யானைகள் அடித்துக் கொன்று இருக்கின்றது சுமார் 50 இற்கு மேற்பட்ட வீடுகள் யாளைகளினால் முற்றாக உடைக்கப்பட்டுள்ளன. யுத்தத்தினால் துன்பப்பட்ட நாங்கள் தற்போது காட்டு யானைகளினால்துன்பப்பட்டுக்கொண்டே இருக்கின்றோம்.இந்தநிலமைதொடருமாக இருந்தால் நாங்கள் யுத்தகாலத்தில் எவ்வாறு இடம்பெயர்ந்தோமோ அதுபோல் தற்போது காட்டு யானைகளுக்கும் பயந்து இடம்பெயரவேண்டிய நிலமை ஏற்படும் என தனது மன ஆதங்கத்தை மிகவும் உரத்த குரலில் எடுத்தியம்பினார். பாலையடிவட்டைக் கிராமத்தைச் சேர்ந்த அ.தயாபரன்.

இதுஇவ்வாறிருக்கநாங்கள்தற்போது யானைகளின் அட்டகாசத்தினால் படும் பாடுகளைப்பற்றி பிரதேச செயலாளர் பிரதேசசபை, மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், வனஜீவராசிகள் திணைக்களம், அரசாங்க அதிபர், போன்ற பலருக்கும் அறிவித்தும் எமக்குரிய பலன் இதுவரை கிட்டவில்லை. நாங்கள் கோருவது எமது வாழ்வாதாரத்தை அழித்துவரும், காட்டு யானைகள் கிராமத்திற்குள் உட்புகுரும் மையப்பகுதிகளைச் சுற்றி மின்வேலிகள் அமைத்துத் தரவேண்டும் என்பதுவே ஆகும்.

ஆனால்எமக்குநான்கு,ஐந்துயானை வெடிகள் மாத்தரம் தரப்படுகின்றன யானைகள் வரும் போது அதனை நாங்கள் வெடிக்கவைத்தால் அந்த வெடிகளை யானைகள் ஏனோ, தானோ என்று விட்டுப்போகின்றன.

அதனைவிட அந்த வெடிகளுக்கு இங்குள்ள யானைகள் பழக்கப்பட்டு விட்டன. நாம் எத்தனை தடவைகள் சம்மந்தப்பட்டஅதிகாரிகளுக்குமின்வேலி அமைக்க வேண்டும் என்று கூறியும் அது இதுவரை அது எமக்குக்கைகூடவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது இவ்வாறிருக்க இப்பிரதேசம் வேளாண்மைச் செய்கைக்குப் பெயர்போனது இங்குள்ளவர்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர் இந்த விவசாயிகளின் கத்தரி, வெண்டி, மரவள்ளி, தென்னை, வாழைத் தோட்டங்களையும், அழித்து வருவதோடு வேளாண்மைவயல்களையும்அழித்துநெல்

மூட்டைகளையும்உண்டும்,சேதப்படுத்தியும், வருகின்றன தமிழர்களாகிய எமது வாழ்வாதாரத்தை பூண்டோடு அழியட்டும் என சம்மந்தப்பட்டவர்கள்



நினைக்கின்றார்களோ என எண்ணத் தோணுகின்றது. என அவரது மன ஆதங்கத்தை எம்மிடம் கொட்டிதீர்தார். காக்காச்சுவட்டடைக் கிராமத்தினைச் சேர்ந்த கிராமவாசி ரி.தியாகராஜா.

காட்டுயானைகளின் தக்குதலுக்கும் அட்டகாசங்களுக்குள்ளும் தள்ளப்பட்டுள்ள படுவான்கரைப் பிரதேச மக்கள் கடந்த காலங்களில் 1957 ஆம் ஆண்டு ஏற்பட்ட பாரிய பெரிய வெள்ளம், அதனைத் தொடர்து, 1978 ஆண்டு வந்த சூறாவளி, பின் தொடர்ச்சியாகப் பீடித்த கோரயுத்தம், பின்னர் தொடரந்து வரட்சி, வெள்ள அனர்த்தம், போன்ற இவைகளனைத்திற்கும் முகம்கொடுத்து தற்போது மெல்ல மெல்ல மீண்டெழுந்து வந்து கொண்டிருக்கும் நிலையில் ‘மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதிப்பதுபோல‘தற்போதுகாட்டுயானைகள் கூட்டமாகவும்தனியாகவும்கிராமங்களும், மக்களின் பயிர் பச்சைகளுக்குள்ளும், புகுந்த அப்பாவி மக்களின் உயிர்களையும், உடமைகளையும் குடியிருக்கும் வீடுகளையும் அழித்து வருவது மட்டுமல்லாமல், அவர்களது வாழ்வாதாரததிற்குத் துணை நிற்கின்ற தொழில்களையும் அழித்து வருவது என்பதுமிகவும்வேதனையானவிடயமே!

இதனைமட்டக்களப்புமாவட்டத்தினைப் பிரதிபலிக்கும்அதிகாரிகளும்,காலத்திற்குக் காலம் தமிழர்களின் வாக்குகளைப் பெற்று அரசியல் அரியாசனம் ஏறும் அரசியல் பிரமுகர்களும், துரிதகதியில் நடவடிக்கை எடுக்க வேண்டுமல்வா?

இப்பிரதேச மக்கள் பன்னெடுங் காலமாக சொல்லெனாத் துயரங்களை எதிர்கொண்டவர்கள், அவர்களை தொடர்ந்தும்துன்புறுத்தும்நடவடிக்கைகள் என்பதற்கு மேலாக காட்டு யானைகளின் தொல்லைகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

ஆனால் இப்பிரதேசம் காட்டு யானைகள் வாழும் பிரதேசம் இல்லை மாறாக மக்கள் குடியிருக்கும் பிரதேசமாகும், யானைகள் வாழும் பிரதேசம்சரணாலயம் ஆகும், எனவே இங்குள் மக்கள் குடியிருப்புக்கள் வாழும் இடங்களிலுள்ள காட்டு யானைகளை வெடிகள் வைத்தோ அல்லது மின்சாரவேலிகள் அமைத்தோ தடை செய்வதுஎன்பதற்குமேலாகஇவைகளை பிடித்துக் கொண்டு யானைகள் வாழும் சரணாலயங்களில் விடுவதுதான் சாலச் சிறந்த விடயமாகும்.

மக்கள்வாழும்குடியிருப்புக்களுக்கள் யாட்டுயானைகள்வருவதுஎன்பதுஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது. இவைகளைப் பிடித்து சரணாலயங்களில் விட்டால் யானைவேலி அமைப்பது என்பது அவசியமில்லை. எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மக்கள் வாழும் குடியிருப்புக்களின் அருகிலுள்ள பற்றைக் காடுகளில் தங்கியுள்ள யாட்டு யானைகளை பிடித்துக்கொண்டு சரணாலயங்களில் விடவேண்டும், யானை வேலி அமைக்கப்பட்ட இடத்திற்குள் இருக்கின்ற யானைகளை துரத்தி வேலிக்கு அப்பால் விடுவிட வேண்டும். புதிதாக யானை வேலிகள் உடனடியாக அமைக்கப்பட வேண்டும். அடுத்து மக்கள் குடியிருக்கும் பகுதியில்இருக்கின்றகாட்டுப்பகுதியினுள் தொடர்ந்து காட்டு யானைகள் தங்கி நிற்கின்றன.அக்காடுகளைதுப்பரவுசெய்து அங்குள்ள யானைகள் வெளியேற்ற வேண்டும்.

இந்நிலையில் 1900 ஆண்டுகளில் நாட்டில் 88 சதவீதம் காடுகள் இருந்தன ஆனால் தற்போது 20 மில்லியனுக்கு மேலாக மக்களும் 18 சத வீதத்திற்குக்குறைவான காடுகளுமே உள்ளன. தற்போது நாட்டில் மக்கள் குடியிருக்கவும் பயிர் செய்கைகளுக்கும் தொழிற் பேட்டைகளுக்குமாக பல்வேறு தேவைகளை மையப்படுத்தி காடுகள் அழிக்கப்பட்டு வருக்கின்றன.

இதனால்காடுகளிலுள்ளயானைகள் உணவை தேடி கிராமங்களுக்குள் செல்கின்றன இருந்த போதிலும் இலங்கையில்மின்சாரவேலிகள்அமைக் கும் செயற்பாடு நடைமுறையிலுள்ளன. ஆனாலும்இத்திட்டத்தினால்யானைகளின் தொல்லைகளைக் குறைக்கலாமே தவிர குற்றுமுழுதாக ஈடு செய்ய முடியாது எனத் தெரியவருகின்றது.

எது எப்படி இருப்பினும் மட்டக்களப்பு மாவட்டத்தின்படுவான்கரைப்பிரதேசத்தில் காட்டுயானைகள்மக்களின்வீடுகளையும், பயன்தரும், தென்னை, வாழை, பலா, மா, வேளாண்மை, உள்ளிட்ட, தமிழ் மக்களின் பயிர்களை அழிப்பதை இனிமேலும்கட்டுப்படுத்தவில்லையாயின் அப்பகுதியிலுள்ள காட்டுயானைகளின் அட்டகாசத்திற்குட்படும் மக்கள் தமது சொத்துக்கள் அனைத்தினையும் விட்டு, விட்டு கடந்த யுத்த காலத்தில் இடம்பெயர்ந்ததுபோல்மேலும்,இடம்பெயர வேண்டிய நிலமை ஏற்படும் எனவும் அப்பகுதி மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

கிராமத்திற்குள் காட்டு யானைகள் புகுந்தவுடன் மக்கள் எமக்கு அழைப்புக்களைஎடுப்பார்கள்உடன்அங்கு சென்றுநாம்யானைவெடிகளைவைத்து யானைகளை விரடி வருகின்றோம். மேலதிகமாக மக்களிடத்திலும் யானை வெடிகளை பிரதேச செயலகங்கள் ஊடகா வழங்கி வருகின்றோம் என வனஜீவராசிகள் பாதுகாப்புதிணைக்கள உத்தியோகஸ்த்தர்கள்தெரிவிக்கின்றனர்.

எனினும்நாம்அழைப்புஎடுக்கும்போது என வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகஸ்த்தர்கள் உரியவாறு பதிலளிப்பதில்லை எனவும் யானைகள்ஊருக்குள்நுளைந்தால்நாம் அவர்களுக்கு அறிவிப்போம் அவர்கள் உரியநேரத்திற்குவரமாட்டார்கள்அவர்கள் வருவதற்கு இடையில் எமது பயிர்களை யானைகள்அழித்துவிட்டுச்செல்கின்றன என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்

எனவே சம்மந்தப்பட்ட, அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள், அப்பகுதி மக்களின் நிலமையினைக் கருத்தில் கொண்டு தமிழர்களின் வாழ்வாதாரம் நீடித்து நிலைத்திருக்கச் செய்வதற்கு உரிய வேலைத் திட்டத்தினை காலநேரம் பாராமல் மிகவிரையில் அமுல்ப்படுத்த வேண்டும் என்பதையே அப்பகுதி மக்கள் எதிர் பார்த்திருக்கின்றனர்.

# கைத்தொழில் புரட்சி



நவீன உலகினை வடிவமைத்த காரணிகளுள் பல்வேறு புரட்சிகளுக்கு முக்கிய பங்குண்டு. அவற்றுள் கைத்தொழிற் புரட்சியும் முக்கியமான ஒன்றாகும். இது அறிவியல் வளர்ச்சியினால் தொழிற்றுறையில் ஏற்பட்டதோர் விரைவான மாற்றமாகும். 1760 - 1830 வரையான காலத்தில் பிரித்தானியாவின் கைத்தொழிற் துறையில் இத்தகைய பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. கைகளால் உற்பத்தி செய்யப்பட்ட பாரம்பரியமான குடிசைக் கைத்தொழிலுக்கு மாற்றாக இயந்திரங்களின் உதவியுடன் பெரிய தொழிற்சாலைகளில் பாரிய கேள்வியினை பூர்த்தி செய்யும் வகையில் அதிகளவான பொருட்களை உற்பத்தி செய்யும் முறையினை குறிப்பதற்கே கைத்தொழில் புரட்சி எனும் பதமானது 18ம் நூற்றாண்டிலிருந்து பயன்படுத்தப்படுகிறது.

கைத்தொழில் புரட்சியானது பிரித்தானியாவில் முதலாவதாக ஏற்பட்டுக் கொண்ட போதிலும் 1825 வரையான காலத்தில் பிரித்தானிய விஞ்ஞானிகளும், தொழினுற்பமும் வெளிச்செல்ல பிரித்தானியாவால் தடுக்கப்பட்டமையும் அந்தந்த நாடுகளில் காணப்பட்ட அரசியல், பொருளாதார, சமூக நிலைகளும் ஏனைய நாடுகளில் புரட்சி பரவுவதில் தாமதத்தினை ஏற்படுத்தின. 19ம் நூற்றாண்டிலிருந்தே கைத்தொழிற் புரட்சியானது ஏனைய நாடுகளான பெல்ஜியம், பிரான்ஸ்,ஜேர்மனி, சுவீடன், ஆஸ்திரியா, ஹங்கேரி, ஐக்கிய அமெரிக்கா, யப்பான் போன்ற நாடுகளுக்கு பரவியது.

1820ன் பின்னர் பெல்ஜியத்தில் கைத்தொழில் புரட்சி ஆரம்பித்தது. அங்கு காணப்பட்ட நிலக்கரி, இரும்புத்தாது போன்றன கைத்தொழில் புரட்சி ஏற்படுவதற்கு வாய்ப்பாக அமைந்தன. பிரான்சினைப் பொறுத்தமட்;டில் பிரான்சியப் புரட்சி, நெப்போலிய யுத்தங்களால் ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலை, உள்நாட்டு இறைவரிக் கொள்கை, பிரான்சிய மக்கள் இயந்திரங்கள் மூலம் செய்யப்பட்ட பொருட்களை விட கைகளால் செய்யப்பட்ட பொருட்களையே அதிகம் விரும்பியமை, பிரான்சில் தரமான நிலக்கரி கிடையாமை போன்ற காரணிகளால் பிரான்சில் கைத்தொழில் புரட்சி ஏற்படுவது தாமதித்தாலும் 19ம் நூற்றாண்டிலில் கைத்தொழில் துறையின் வளர்ச்சிக்கு அரச ஆதரவு கிடைத்தது.

1871ல் ஜேர்மனிய ஐக்கியத்தினைத் தொடர்ந்து அங்கு ஏற்பட்ட அரசியல் ஸ்தீரணமும் இரும்புத்தாது, நிலக்கரி போன்ற வளங்கள் அங்கு காணப்பட்டமையும் 19ம் நூற்றாண்டில் ஜேர்மன் பலமிக்க கைத்தொழில் நாடாவதற்கு காரணமாகியது. ரஷ்யா ஓர் விவசாய நாடாக காணப்பட்ட போதிலும் 1917 அக்டோபர் புரட்சியின் பின்னர் அங்கு கைத்தொழிற்றுறையானது புரட்சிகர மாற்றங்களுக்குட்பட்டது. பத்து வருட குறுகிய காலத்துக்குள் ரஷ்யாவானது உருக்கு, இரசாயன, இயந்திரவியல், பெற்றோலிய கைத்தொழில்களில் துரித வளர்ச்சி கண்டது.

பிரித்தானியாவில் கைத்தொழில் புரட்சி நடைபெற்ற பொழுது அமெரிக்கா பிரித்தானியாவின் காலனியாக விளங்கியது. பொருளாதார பலமே தம்மை சுதந்திரத்திற்கு இட்டுச் செல்லும் என நம்பிய அமெரிக்கர் கைத்தொழில் புரட்சியினை வரவேற்றதுடன் இங்கு காணப்பட்ட வளங்கள், பெரிய உள்நாட்டுச் சந்தை, தடையில்லா போக்குவரத்து வசதி போன்றவற்றினால் 19ம் நூற்றாண்டில் ஐக்கிய அமெரிக்கா பலமான கைத்தொழில் நாடானது.

1970ன் பின்னர் ஜப்பானிலும் கைத்தொழில் புரட்சி ஏற்பட்டது. இங்கு மேஜிஜி காலத்தில் மேலைத்தேய கல்வி வளர்ச்சி, கைத்தொழிலை வளர்ப்பது தொடர்பான அரச கொள்கை, வங்கிகள் நிறுவப்பட்டமை என்பவற்றைத் தொடர்ந்து அங்கு கைத்தொழில் மயமாக்கல் ஏற்பட்டது. பிரித்தானியாவைப் போன்று இங்கும் நெசவுத் துறையிலேயே புரட்சி ஆரம்பித்தது.

## கைத்தொழிற் புரட்சிக்கான காரணங்கள்

1) போதிய முலதனத் திரட்சி- 16ம் நூற்றாண்டிலிருந்து பிரித்தானியாவில் விருத்தியடைந்த வெளிநாட்டு வியாபாரம் சிறு கைத்தொழிலின் விருத்தி என்பவற்றால் மக்களிடையே பணப்புழக்கம் அதிகரித்தது. இதனால் வங்கிகள் போன்ற நிதியியல் சார் நிறுவனங்கள் தோற்றம் பெற்றன. இவ்வாறு தோற்றம் பெற்ற வங்கிகளில் வைப்பிடப்பட்ட பணத்தின் மூலமாக மூலதனத்திரட்சி உண்டானது. வங்கிகளும் முதலீடு, கடன் போன்ற வசதிகளை வழங்கி வந்தன. இவ்வாறாக தொழிற்றுறைக்கு வேண்டிய மூலதனம் கிடைத்தமையானது கைத்தொழில் புரட்சி ஏற்படுவதற்கு காரணமாய் அமைந்தது.

2) சந்தைகளின் பெருக்கம் - பிரித்தானியப் பேரரசானது 17பீ18ம்,18ம் நூற்றாண்டில் ஆசிய, ஆபிரிக்க, அமெரிக்க கண்டங்களில் வளரத்தொடங்கியதுடன் பிரித்தானியா அந்நாடுகளுடன் வர்த்தக உறவினையும் விருத்தி செய்துகொண்டது. எனவே பிரித்தானிய உற்பத்திகளுக்கு பாரம்பரியமான ஐரோப்பிய சந்தைகளினைத் தாண்டி ஆசிய, ஆபிரிக்க, அமெரிக்க சந்தைகளிலும் வாய்ப்புக்கள் ஏற்பட்டன. எனவே சந்தைகளின் பெருக்கத்திற்கு ஏற்ப அவற்றின் கேள்வியை பூர்த்தி செய்யும் வகையில் விரைவாகவும் அதிகமாகவும் பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டமை.

3) அரசியல் உறுதிப்பாடு - ஏனைய ஐரோப்பிய நாடுகளில் மானிய முறையின் முக்கிய அம்சங்கள் மறைந்து போகும் முன்னமே பிரித்தானியாவில் மானியமுறை வலுவிழந்துவிட்டது. இது அரசியல் உறுதிப்பாடு உருவாவதற்கு காரணமானதுடன் மூலதன திரட்சிக்கும் வழிவகுத்தது. அதுமட்டுமல்லாது 1688ஆம் ஆண்டின் புரட்சியின் பின்னரான அமைதியான அரசியல் நிலையானது புதிய தொழில் முயற்சிகளினை ஆரம்பிப்பதற்கான நம்பிக்கையினை ஏற்படுத்தின.

4) பாரிய கைத்தொழில் முயற்சிகளுக்கு அனுசரனை வழங்கக்கூடிய முயற்சியாளர் வகுப்பு தோற்றம் பெற்றமை - நிலமானிய முறைமையினது வீழ்ச்சியின் பின்னர் பிரித்தானியாவில் ஆதிக்கம் செலுத்திவந்த நிலச்சொந்தக்காரர்கள் கைத்தொழில், வர்த்தக முயற்சிகள் மூலம் இலாபமடைய வேண்டிய நிலை ஏற்பட்டது. இத்தகைய உயர்குடியினைச் சேர்ந்த இளையதலைமுறையினர் வர்த்தக, தொழில் முயற்சியில் அதிக ஈடுபாடு காட்டினர்.

5) விவசாயத்துறையினில் புரட்சி ஏற்பட்டமை - பிரித்தானியாவில் ஏற்பட்ட விவசாயப் புரட்சியினால் விவசாய நிலங்களிலிருந்து கூடிய பயனைப் பெறும் பொருட்டு சிறிய நிலங்கள் இணைக்கப்பட்டு பெரிய பண்ணைகள் உருவாக்கப்பட்டு பாரியளவில் விவசாயம் செய்யப்பட்டது. இதன் காரணமாக நிலத்தை இழந்த சிறுநில விவசாயிகள் தமது தொழிலினை இழந்த நிலையில் தம் ஜீவனோபாயத்திற்காக நகர்ப்பகுதியில் விருத்தியடைந்து வந்துகொண்டிருந்த கைத்தொழிற்றுறையில் இணைந்து கொண்டமையினால் கைத்தொழிற்றுறைக்கு வேண்டிய போதிய தொழிலாளர்கள் கிடைத்தமை.

6) முலப்பொருட்களை வெளிநாடுகளில் இருந்து பெறக்கூடியதாக இருந்தமை - நிலக்கரி, இரும்புத்தாது போன்றன இங்கிலாந்திலே அதிகளவு கிடைக்கக் கூடிய வளங்களாக இருந்தன. இவை கைத்தொழிலுக்காக அதிகம் பயன்படுத்தப்பட்டன. இத்துடன் பிரித்தானிய பேரரசானது தான் கைப்பற்றி வைத்திருந்த நாடுகளிலிருந்து தேவையான முலப்பொருட்களை மலிவாகவும் அதிகளவிலும் பெற்றுக்கொள்ள முடிந்தமை. சான்றாக இந்தியா, எகிப்து, சூடான் போன்ற நாடுகளில் இருந்து பிரித்தானியாவின் நெசவுத் தொழிலுக்கு வேண்டிய உயர்தரமான பஞ்சு பெறப்பட்டமை.

7) அறிவு மறுமலர்ச்சி, புதிய கண்டுபிடிப்புக்கள் - இக்காலத்தில் இங்கிலாந்தில் வாழ்ந்த விஞ்ஞானிகளும் பொறியியலாளர்களும் காலத்தின் தேவைக்கு ஏற்றாற்போல் பல்வேறு கருவிகளினை கண்டுபிடித்தனர். நிலக்கரி, இரும்பு போன்றவற்றின் பயன்பாடு நெசவுத்தொழிலுக்கு வேண்டிய கருவிகள், நீராவித் தொழினுற்பம் போன்றன அவற்றுள் குறிப்பிடத்தக்கன. அரசாங்கத்தினாலும் புதிய கண்டுபிடிப்புகளுக்காக ஊக்கமளிக்கப்பட்டது. இவையும் கைத்தொழில் வளர்ச்சியடைவதற்கு வலுச்சேர்த்தன.

8) போக்குவரத்து வசதியின் விருத்தி - அக்காலத்தில் ஏனைய ஐரோப்பிய நாடுகளில் காணப்பட்டதைவிட நன்கு வளர்ச்சியடைந்த போக்குவரத்து கட்டமைப்பினை பிரித்தானியா கொண்டிருந்தது. மூலப்பொருட்களையும் முடிவுப் பொருட்களையும் கொண்டு செல்வதற்கு முறையான வீதிகள், கால்வாய்கள் போன்றவற்றினை அரசாங்கமே அமைத்துக் கொடுத்தது. நாடு முழுவதும் பரந்திருந்த வீதிக்கட்டமைப்புகளே பிரித்தானியாவின் கைத்தொழிற்

புரட்சிக்கு உதவியாக இருந்ததென அடம் ஸ்மித் தனது 'நாடுகளின் செல்வம்' எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

9) புவியியல் ரீதியான அமைவிடம் – பிரித்தானிய தீவுகள் அத்திலாந்திக் சமுத்திரத்திற்கு மத்தியில் அமைந்துள்ளன. இதனால் தன் கடல் வலிமையினை அதிகரித்துக்கொண்ட பிரித்தானியா பிற நாடுகளிலிருந்து முலப்பொருட்களைப் பெறுவதற்கும் வணிக நடவடிக்கைகளினை மேற்கொள்வதற்கும் அதன் அமைவிடம் வாய்ப்பானதாக விளங்கியதுடன் பிரித்தானியாவுக்கு பாதுகாப்பினையும் வழங்கியது.

10) விருத்தியடைந்த வங்கிகள், நிதி நிறுவனங்கள் காணப்பட்டமை – மத்திய வங்கி, பங்குச்சந்தைகள், காப்புறுதிக் கம்பனிகள் போன்றன புதிய முதலீடுகளுக்கும் தொழில் முயற்சிகளுக்கும், வர்த்தக நடவடிக்கைகளுக்கும் தூண்டுதலாக அமைந்தன. இத்தகைய நிலையினை வட பிரித்தானியாவில் தெளிவாக காணமுடிந்தது.

11) கைத்தொழில் வளர்ச்சிக்காக அரசு பின்பற்றிய கொள்கைகள் – சொத்து, உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பிலும் புதிய கண்டுபிடிப்பாளர்கள் வர்த்தக ரீதியிலில் பயன் பெறும் வகையில் அறிவுசார் சொத்துடமை தொடர்பிலும் புதிய சட்டங்களை கொண்டுவந்ததுடன் தன் கடற்படை வலிமையின் மூலமாக வெளிநாட்டு வர்த்தகங்களுக்கு அரசு பாதுகாப்பு வழங்கியமையானது கைத்தொழில் புரட்சி ஏற்படுவற்கான சூழ்நிலையினை வழங்கியிருந்தது.

## கைத்தொழிற் புரட்சியினது விளைவுகள்

கைத்தொழில் புரட்சியானது இங்கிலாந்திலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் ஏற்படுவதற்கு பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல் காரணிகள் இன்றியமையாது இருந்தது போலவே கைத்தொழில் புரட்சியும் சமூக, பொருளாதார, அரசியல் விளைவுகளை ஏற்படுத்தியிருந்தது.

### சமூக ரீதியான விளைவுகள்

1. நகரங்களின் வளர்ச்சி, நகரமயமாக்கம் – பண்ணை விவசாய முறைமையினது விருத்தியினால் ஏற்பட்ட வேலியடைப்பினைத் தொடர்ந்து கிராமங்களில் வாழ்ந்த மக்கள் வேலை வாய்ப்பிற்காக நகர்ப்பகுதிகளில் அமைந்திருந்த கைத்தொழிற் சாலைகளினை நாடினர். கைத்தொழிற் புரட்சிக்கு முன்னராக 80 சதவீதமாக காணப்பட்ட பிரித்தானியாவின் சனத்தொகை 1871ல் 28 சதவீதமாக குறைந்தது. இவாறான நகரங்களுள் லண்டன், லிவர்பூல், மஞ்செஸ்டர் போன்றன குறிப்பிடத்தக்கன. 1850ம் ஆண்டுகளில் ஐரோப்பாவின் ஏனைய நகரங்களில் காணப்பட்டதை விட இங்கு அதிக சனத்தொகை காணப்பட்டது.

2. பாரம்பரிய சமூகக் கட்டமைப்பு நிலைகுலைவு– ஆரம்பத்தில் உயர்குடியினர், சாதாரண மக்கள் எனும் இரு பிரிவினர் காணப்பட்டனர். இவ்விரு வகுப்பாரும் நிலத்தோடு தொடர்புபட்ட வகையில் நில உரிமையாளராகவும் பண்ணை அடிமைகளாகவும் காணப்பட்டனர். ஆயினும் கைத்தொழிற் புரட்சியின் பின்னர் உற்பத்திக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு சமூகக் கட்டமைப்பானது முதலாளி – தொழிலாளி என மாற்றமுற்றது. இச்சமூகக் கட்டமைப்பில் குடும்பத் தேவைக்காக சிறுவர்களும் பெண்களும் உழைக்கவேண்டி ஏற்பட்டதுடன் அவர்களது உழைப்பு கடுமையாக சுரண்டப்பட்டது.

3. முதலாளி, தொழிலாளர் வர்க்கமும் வர்க்கப்போராட்டமும் – உற்பத்திக் காரணிகளுக்கு சொந்தமான முதலாளி, தன் உழைப்பை விற்பதற்கு தயாராகவிருக்கும் தொழிலாளி என பிரதானமான இருவர்க்கங்கள் கைத்தொழிற் சமூகத்தில் உருவாகிக் கொண்டது. முன்னர் குடிசைக் கைத்தொழிலில் தேர்ச்சிமிக்கோராக காணப்பட்ட தொழிலாளர் இயந்திரங்கள் நிறைந்த தொழிற்சாலைகளில் தேர்ச்சியற்ற தொழிலாளராகவே காணப்பட்டனர். இதனால் முதலாளிகளின் சுரண்டலும் அதிகரித்தது. இந்நிலைமை முதலாளி – தொழிலாளி வர்க்கப்போராட்டத்திற்கு இட்டுச்சென்றது.

4. நடுத்தர வகுப்பாரின் தோற்றம் – முதலாளி, தொழிலாளி எனும் இரு வகுப்பினருக்குமிடையில் நாற்கூலியினை நம்பியிராத மத்தியதர வகுப்பொன்று உருவானது. 19ம் நூற்றாண்டிலிருந்து புதிய தொழிற்றுறையிலும், அரச துறைகளிலும் பணிபுரிந்தோராகவும் இவர்கள் விளங்கினர். வியாபாரிகள், வங்கி முகாமையாளர்கள், காப்புறுதி முகவர்கள், கணக்காளர்கள், முகாமையாளர்கள், வழக்கறிஞர், ஆசிரியர் போன்றோர் இவ் மத்தியதரவகுப்பில் அடங்குவர். இவர்களது வாழ்க்கை முறையானது முதலாளிகளைப் போன்று ஆடம்பரமாக அமையாது விடினும் தொழிலாளர் வகுப்பைவிட உயர்வானதாகவே காணப்பட்டது. லண்டன், லிவர்பூல், மஞ்செஸ்டர், பர்மிங்ஹாம் போன்ற நகரங்களில் மத்திய தர வர்க்கத்தினரின் தோற்றத்தினை அவதானிக்க முடிந்தது.

5. தொழிலாளரின் மோசமான வாழ்க்கை நிலைபீ– கைக்தொழில்சாலைகளில் பணிபுரிந்த தொழிலாளர்களது நிலையானது மிகவும் மோசமானதாக இருந்தது. கடினமான தொழில் நிலைமை, சன நெரிசல் மிக்க குடியிருப்புக்கள், சுத்தமான சூழலின்மை போன்றவற்றாலும் மிக மோசமான பிரச்சினைகளினை எதிர் நோக்கினர். இதனால் கொலரா, காசநோய், தைபொயிட்டு போன்ற நோய்களால் தொழிலாளர்கள் பலர் பாதிக்கப்பட்டனர். 1849ல் லண்டனில் 10,000 பேர் கொலரா நோயினால் இறந்தனர்.

6. சூழல்மாசடைதல்–கைத்தொழில்புரட்சியானது ஏற்பட்ட காலத்தில் பிரதான எரிபொருளாக நிலக்கரி பயன்படுத்தப்பட்டது. இதிலிருந்து வெளியான காபன் வளிமண்டல மாசடைவிற்குக் காரணமானதுடன் மூலப்பொருட்களான இரும்புத்தாதுவினை அகழ்தெடுக்கும் முயற்சியும் தொழிற்சாலை கழிவுகளை அகற்றும் முறைமையும் நிலத்தையும் நீரையும் கடுமையாக மாசுபடுத்தியது.

### பொருளாதார விளைவுகள்

1. விவசாயப் பொருளாதாரம் கைத்தொழில் பொருளாதாரமாக மாற்றமுற்றமை– பிரித்தானியாவின் பொருளாதாரமானது கைத்தொழிற் புரட்சிக்கு முன்னர் விவசாயத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆயினும் கைத்தொழிற் புரட்சிக்குப் பின்னர் 19ம் நூற்றாண்டில் 40 சதவீதத்திற்கும் குறைவான உணவு உற்பத்தியே பிரித்தானியாவில் மேற்கொள்ளப்பட்டதுடன் பிரித்தானியாவின் கைத்தொழிற் பொருட்களை உலக நாடுகளனைத்திலும் சந்தைப்படுத்தக்கூடிய அளவிற்கு பிரித்தானியா 'உலகின் தொழிற்சாலையாக' மாற்றமுற்றது. இதனால் பிரித்தானியாவின் செல்வச் செழிப்பானது முழுவதுமாக கைத்தொழிற்றுறையினையே நம்பியிருக்கம் நிலைக்கு மாற்றமுற்றது.

2. குடிசைக் கைத்தொழில் வீழ்ச்சியுற்றமை – பிரித்தானியாவின் கிராமப்புறங்களில் குடிசைக் கைத்தொழில் சிறப்புற்றிருந்த போதிலும் பாரிய தொழிற்சாலைகளில் பெரியளவில் உற்பத்திகள் ஆரம்பமான பின்னர் கிராமிய மக்களும் வேலை வாய்ப்பினைத்தேடி நகர்ப்பகுதிகளில் குடியேறியமையைத் தொடர்ந்து நெசவுக்கைத்தொழில் போன்ற குடிசைக் கைத்தொழில்கள் பாதிக்கப்பட்டன.

3. முதலாளித்துவத்தின் வளர்ச்சி–கைத்தொழில் புரட்சியின் பின்னர் உருவான மூலதனத் திரட்சியினைத் தொடர்ந்து முதலாளித்துவம் வளர்ச்சியடைந்து நாட்டினது அரசியல் பொருளாதாரத்தை தீர்மானிக்கும் முக்கிய சக்தியாக மாறியது. இவ் முதலாளித்தவம் சார்ந்த அரசியல் நாடுகளிடையே பல்வேறு சச்சரவுகளுக்கும் வர்க்க மோதல்களுக்கும் காரணமாக அமைந்தது.

4. தனியார் துறையின் வளர்ச்சி– தொழிற் சாலையின் உரிமையாளர்களாக இருந்த முதலாளிகள் பல்வேறு துறைகளில் முதலீடுகளை மேற்கொண்டமையும் இதற்கு அரச ஆதரவு வழங்கப்பட்டமையும் தனியார் துறை சார்ந்த பொருளாதாரம் வளர்ச்சியடையக் காரணமானது. வங்கிகள், காப்புறுதித் தாபனங்கள், பல்வேறு கம்பனிகள் போன்றன கைத்தொழில் துறையின் வளர்ச்சியோடு இணைந்து வளர்ந்த தனியார் துறைசார்ந்த முக்கிய நிறுவனங்களாகும்.

5. நவ குடியேற்றவாதத்தின் வளர்ச்சி– 20ல் நூற்றாண்டில் ஏகாதிபத்தியத்தின் கீழிருந்த பல்வேறு நாடுகள் சுதந்திரமடைந்த பின்னர் கைத்தொழில் நாடுகள் தமக்குத் தேவையான மூலப்பொரட்களைப் பெறவும் முடிவுப் பொருட்களை சந்தைப்படுத்தவும் பல்வேறு நூதன வழிமுறைகளில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளை கட்டுப்படுத்துகின்றன. இதுவே நவ குடியேற்றவாதம் எனப்படுகிறது.

### அரசியல் விளைவுகள்

1. பல்வேறு அரசியல் பொருளாதார கொள்கைகளின் தோற்றம் – முதலாளித்துவம், சமூகவுடைமைவாதம், மாக்ஸிஷவாதம், பயன்பாட்டுவாதம், தலையிடா அரசுக் கொள்கை என்பன பல்வேறு அறிஞர்களினால் அறிமுகப்படுத்தப்பட்டமைக்கு கைத்தொழிற் புரட்சி ஏற்படுத்திய தாக்கங்களே காரணமாக அமைந்தன. பின்னர் இவற்றின் அடிப்படையிலேயே அரசின் போக்குகளும் பொருளாதாரமும் ஆராயப்படலாயின.

2. தொழிலாளர் அமைப்புக்களும் நலன்பேணும் சட்டங்களும் உருவானமை– சுரண்டலுக்குள்ளான தொழிலாளர்கள் தமது நிலையினை மேம்பாடடையச் செய்யும் வகையில் தொழிற்சங்கங்களை உருவாக்கிக் கொண்டனர். ஆரம்பத்தில் இவை முதலாளித்துவத்தின் இயந்திரமான அரசினால் ஒடுக்கப்பட்ட போதும் தொடர்ந்தும் தொழிலாளர் முயற்சியை அடக்க முடியவில்லை. ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் போன்ற தொழிற்சங்க நடவடிக்கைகள் மூலம் தொழிலாளர்கள் படிப்படியாக பல்வேறு உரிமைகளைப் பெறமுடிந்தது. வேலை நேரக் குறைப்பு, வேலைத்தளப் பாதுகாப்பு, விடுமுறைகள் போன்றன அத்தகைய சில உரிமைகளாகும்.

3. ஏகாதிபத்தியத்தின் விரிவு– கைத்தொழில் நாடுகள் தமது இலாபத்திற்காக பல்வேறு நாடுகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் தமது ஏகாதிபத்தியத்தின் கீழ்வைத்திருப்பது அவற்றுக்கு இலாபமான ஒன்றாகையால் தமது ஏகாதிபத்தியத்தினை விரிவுபடுத்திக் கொண்டன. இதனால் நாடுகளுக்கிடையில் ஏகாதிபத்தியத்தை விரிவுபடுத்திக் கொள்வதில் போட்டிகள் எற்பட்டன. இதுவே உலகப் போர்களுக்கும் காரணமானது. இத்தகைய நிலையானது 21ம் நூற்றாண்டிலும் தொடர்கிறது.

# மருதம் பசுமை நகர்
## Marutham Green City

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்




A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி

B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)

C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்

நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km

### உள்ளக வசதிகள்

- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

0777 43 55 57

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.03.2025 இல் வெளியிடப்பெற்றது.